உ

கடவுள் துணை.

வடக்கே க்ஷாமகண்டாரியர் ஆட்சியும் தெற்கே சாலியர் ஒதுங்குதலும்.

இஃது

பேட்டை

த. ஆறுமுகசாமினர்பிள்ளையவர்களால்

இயற்றப்பட்ட

சாலியவந்தணர் புராணம்

என்ற

மகா சைவர் புராணம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
22 JUL 1914
MADRAS.

27-வது சாலியவந்தணர் அவாசியிற் குடியேறியபடலம்.

மலர் ௧. ஆனி மீ இதழ் ௩.

இதனை

உரை வெளியிட வேண்டிய பாட்டுகளுக்குத் தொகையாகப் பிண்டப்பொழிப்பும், வகையாக அறிதக்க உண்மைகளுக்குப் பொருளுரை விளக்கமும் எழுதி வெளியிட வேண்டுமென்று வடசேரியிற் (சாலியப்பட்டருள்) சிலபெரியோர் வேண்டுகோளின்படி இந்நூலாசிரியரால் அவ்வாறு எழுதித்தரப்பெற்று

பாளையங்கோட்டை:
ஸ்ரீ விஜய லக்ஷ்மி விலாச அச்சியந்திரசாலைத்
தலைவர்
M. நல்லசிவன்பிள்ளையவர்களால்,
பதிப்பிக்கப்பெற்றது.

...தந்தோறும் ஒவ்வொரு சஞ்சிகையாக
...ணம் வெளிவரும்.

...4. வருடம் 1-க்கு ரூ. 2—8—0.

1914.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 22 JUL 1914 MADRAS.

ஹர:

சாலியவந்தணர் அலாசியிற் குடியேறிய படலம்.

திறனார் சாலி கோத்திரர்தாஞ் சிவராத்திரிநோன் பாற்றியுநல்,
லறனார் தருவான் பேரற்கிழிபெற் றரனாணையிற்பன் னாளிருந்தே, நிற
னார் கயிலை யடைந்தவுண்மை நிகழ்த்தி னாமே லவர்முன்னோர், மறனா
ரியர்கோன் கொடுந்தெய்வ வரைவிட் டகன்ற திறன்சொல்வாம் (க)

மானத் துறவோர் மனத்திலிது மதித்தோ வறவோய்! தேவகிரி,
தானச் சாலி கோத்திரமா தவர்வாழிடமா மந்நகர்விட், டேளித் தே
ன்பார் மறைசைமருங் கிருந்தார்? அலதாங் கிருந்துவந்தெங், கோனைச்
சிவராத் திரிதோறுங்கை துவித்தேகினரோ? சொன்மென்றார் (உ)

களித்துச் சூதர் நீர்வினவக் கதைகூறுதுங்கேண் மெனச்சொல்
வார்,தெளித்தவறவோ ரவர்பதியிற் சிறந்துவிளங்கி யுலகமெல்லாம்,
அளித்துப் பகைவர் தொழுங்கழற்கா லரசுந்தொழவாழ் போழ்து சி
லர், ஒளித்த கவடார் *மறைக்கொடியோ நுள்ளம் புழுங்கித் துழீஇ
யுணர்ந்தார் (ங)

நமைப்போ லிவரும் பிரமகுலம் நம்மினுயர்ந்தார் நாந்தாழ்ந்
தோம், இமைப்போ திவர்வாழ் வொழித்திவணா மிவர்வா னெதிர்க்க

---

§ மறைக்கொடியோர்=வேதத்தைக் கொடியாக வுயர்த்தவர். வேதி
யர் வேதத்தைக் கொடியாக வுயர்த்துதல் பண்டைக்கால வழக்கு. இங்
கே சிலர் என்றதனால் மேல் 16-வது கவியில் விவரிக்கப்படு மாதிசாலி
கோத்திராது தாயத்தாராகிய எண்மருடைய மரபினரென வறிக. அக்
கூட்டத்தாரிச்சாலிகோத்திரரிட மியாண்டும் பகைமையை யுடை
யராயேயிருந்து இவருக்குப் பலவிதத்து மிடைஞ்சல்செய்தே வந்திருக்
கின்றன ரென்பதூஉம், இவரவருக்கோ ரிடைஞ்சலுஞ் செய்யாதவரா
யித் திருவருட் செயலையே துணையாகக்கொண்டு ஒதுங்கியே ஜீவித்துவந்
தனரென்பதூஉம், இக்கதையை முற்று மாராய்வாருக்குத் தெற்றென
விளங்குதல் திண்ணம்.

வோறுதுநம்மால், அமைப்போ §மபிசா ரத்தையென்றலவிர்மா
தவராற் செலாதெனினுங், ‡ குமைப்போம் வலாரி செயல்போனுங்
துயிலற் குத்தி யென்னையென்றே (சு)

கூடிக்கலந்து துருவாசர் கோதிக்காட் படுத்த வெண்ணியவர்,
பாடிப் பனவர் போய்வணங்கிப் பகர்ந்தாரைய! சைவ ரேம்பால்,
ஊடிச் செயுவேள் வியைக்கோலையென்றேதுக்கிப் பொருள்வைத்
¶ துயர்நரியாம், வாடித் திரிகின் றேமெனவோர் மகமா டுவமீண்டிநுமி
னென்றர் (ரு)

வருவிப் பிரரை யவணிருத்தி மகத்தை வெறுக்கு மவர்பாற்போ
ய்க், கிருதுக் காய பொருள்வேண்டிக் கிடைத்து வருது மெனப்போந்
தார், பெருதுந் தவயோ கியர்வரவும் பிறங்குஞ் சாலிகோத்திரர் தாம்,
மூருகன் பார்ந்தோர் தவிசிட்டு முகமன் புரிந்தேத் தினர்பணிந்தார் (கூ)

$ அபிசாரம்=மாரணவேள்வி (சூனியம்).

‡ குமைப்போம் வலாரி செயல்போனுமென்பதற்கு—(வலாசுரனை யழித்தற்கு)இந்திரன் செய்தலைப்போல நாமும்(தந்திர வித்திவழிச் சாலி யவந்தணரை) அழிப்போமென்னும் பொருள் காண்க. அதாவது:—

"வலாசுரனுக்கு மிந்திரனுக்கு முண்டாயதோருயுத்தத்திலே இந்திரனடிபட் டோட்டம்பிடித்தனன். வலாசுரன் முன்பில் மிகப்பலஹீனனுய அவ்விந்திரன் தேவருடன்கூடி எவ்விதத்து மிவனைத்தொலைக்காவிடில் நமது குடியிருப்புச் சுகமில்லையென்றாலோசித்தான். அப்போது வலாசுரன் சத்தியந் தவறுதவனுயும், எவருக்குங் கீழ்ப்படியாத பராக்கிரமசாலியாயு மிருத்தலா லவ்வலாசுரனை எதிர்த்து வெல்லுந் திறமையில்லாத நாம் நிராயுதபாணிகளாக அவன் முன்பிற் சென்று அவனைப் புகழ்ந்து உனக்கு வேண்டுவகேளெனின், அவன் நம்மை யிகழ்ந்து உனக்கு வேண்டுவகேள் தருகின்றேமென்பன். உடனவனையே யாகத்திற்குப் பசுவாக வரும்படி கேட்டுக்கொள்வோம். மாறியாடியல்லாத அவன் அவ்வரமுந் தந்தருளுவன். அவ்வழியிலகப்படுத்து அவனைக் கொண்டுபோய் நரமேத யாகம்பண்ணி யுண்ணிற் றொலைந்துபோவான். இதைத்தவிர வேறுபாயமொன்றுமே யில்லையென்றொரு முடிவு செய்துகொண்டார்கள். அவ்வாறே முயலத்துணியு மவரது தீமுயற்சியாலவ்வலாசுரனைச் சத்தியத்தி லகப்படுத்துக் கொண்டுபோய் வஞ்சக சொரூபியாகிய இந்திராதியோர் எரிவளர்த்துச் சுட்டுக்கொன்று தின்றுபோட்டார்கள், என்று கேட்கப்படுகிற பரிதாபகரமானஒரு கதையைச் சூசிப்பித்தவாறும்.

¶ உயர்நர்=உயருகின்றனர். இது—உழுநர்=உழுகின்றவரெனப் பொருடருதல்போன்று நிகழ்காலங் காட்டி நிற்பதாம்.

‡ கண்டு மகிழ்ந்தோ வந்தணிர்! நாங் கருதுமகத்திற் காம்பொரு
டாங், கொண்டு வருதி ரேனவவருங்குயி † ஐம்பெருவேள் விகளினெங்
கட், குண்டு முதல்களிறைத்தலின லுமக்குத் தரவீங் கிலையெனவே,
மண்டு சினத்தால் விழிசிவந்து வருந்திச் சிலசொல் லினர்போனர் (எ)

---

‡ கண்டு மகிழ்ந்தோ வந்தணிர்! நாங்கருதோர் மகத்திற் காம்பொரு டாங்கொண்டு வருதி ரென்பது முதலியன:—

"துர்வாஸௌவாச—யஜ்ஞார்த்தம் ஆகதஸ்ஸோகம் த்ரவ்யந்தத் வாப்ரயத்நத:|| ப்ரேஷணீ யோஹ்யஹம் விப்ரசிரேயசே தவசாலிக|| அதாவது:—துருவாசர் சொன்னதாவது, அந்த நான் எக்கியத்தின்பொருட்டுவந்திருக்கிறேன். ஓ பிராமணரே! சாலிகரே! உம்முடைய சிரேயவின்பொருட்டு முயற்சிசெய்து திரவியத்தைக்கொடுத்து நான் அனுப்பப் படத்தக்கவன். என்றும்,—

"சாலிகோத்ரௌவாச—ஸ்வாமிந்நு தக்ஷிணையாதத்தம் யஜ்ஞே இத்யப்யயேவச|| த்ரவ்யஜாத மசேஷேணமயேதாநீம்முநீச்வர:|| தாரித்ராத்ரவ்யதாநஸ்ய சக்திநாஸ்திமுநீச்வர.||" அதாவது:—சாலிகோத்திரர் சொன்னதாவது, ஓ சுவாமிகாள்! இப்பொழுது எங்களாலே சகல திரவியங்களும் எக்கியத்தில் தக்ஷிணையாகக் கொடுக்கப்பட்டுத்தீர்ந்தது. ஓ முநீச்வர! வெறுமையினாலே(இப்பொழுது எங்களுக்கு)திரவியங்கொடுக்கிறதற்குச் சக்தியில்லையென்றும்,—

"துர்வாஸௌவாச— தச்சிருத்வாது முநிசிரேஷ்ட க்ரோதஸம் ரக்தலோசநம்|| குலம் கோத்ரஞ்ச விஸ்ம்ருத்ய தாரித்ரஞ்சாபி ஸர்வதா|| அக்நிதாஹம் மஹத்பீதிம் பஜத்வமதுநாமுநே|| க்ருத்வாசாபம் தர்ம்மயாத துர்வாஸோ முநிபுங்கவ." அதாவது:—துருவாசர் சொன்னதாவது, முநீச்சுவரர் அதைக்கேட்டு கோபத்தினாற் சிவந்தகண்ணையுடையவராகி, ஓ முநிவர்களே! குலத்தையும் கோத்திரத்தையும் மறக்கக்கடவீர். எப்பொழுதும் தரித்திரத்தையும், அக்கினி தாஹத்தையும், மஹத்தான பயத்தையுமடையக்கடவீராக. என்று சாபத்தைக்கொடுத்துவிட்டுத் துருவாச முனிவர் போய்விட்டார். என்றும் வரும் பிரமாண்டபுராணவசனங்களாலுமுணரக்கிடத்தலறிக.

† ஐம்பெருவேள்வி = அன்னம், ஜலதருப்பணங்களினாலே பிதுர்க்களைக் குறித்து சற்புத்திரர்களால் செய்யப்படும் பிதுர்வேள்வியும்,—தேவர்களைக்குறித்து அக்கினியிற் செய்யும் தேவயாகமும்,—புதிய விருந்தினரை

834
45 20954

போது மவர்பின்றேடர்ந்தினிமை புகன்று சினந்தீர்ந் திடுதோறு,
மேது மறவோர் வாய்மொழிகேட் டிரங்கி யுமையாஞ் சினந்ததென்
னே!, யோகை யுறுநீர் மாதவர்நம் முரையோதவற தெனினுமதாற்,
சோகமிலராய்*மூன்றுதெய்வந் துய்த்தப்பால்வா ழுதிரென்றர் (அ)

அன்னத்தால் மகிழ்விக்கும் அதிதிபூசையும்,—"ஙப்போல்வளை" (ஙகரந் தன்னினத்தைத் தழுவுவதுபோல நீ யுன்னினத்தைத் தழுவிக்கொள்) என்றபடி தன்னினத்தாரை மகிழ்வித்தலாகிய சுற்றந்தழாலும்,-சிவார்ப் பணஞ்செய்து தன் குடும்பத்தோடு தானருந்துதலும், ஆக ஐந்துமாம். அந்தவுண்மை,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கலுனென்றங்
கைம்புலத்தா றோம்பறலை" என்ற சுருதிபோதத்தா லினிது விளங்கும். இதுவமன்றி—இங்கே கூறப்பட்ட ஐந்தனுள்ளே பின்னைய விரண்டனையுந்தள்ளி முன்னைய மூன்றனுடனே இருஷிகளுக்குத் திருப் திசெய்தலாகிய பிரமவேள்வி (வேதமோதுதல்),—வாயச(காக) பலி முத லியவைச் செய்தலாகிய பூதவேள்வி, என்னு மிரண்டனையுங்கூட்டி ஐம் பெருவேள்வி யென்பாருமுளர். இங்ஙனங் கூறுவோர், யாகங்களினாலே தேவர்களையும், சந்ததிகளினாலே பிதுர்களையும், வேதாத்தியயனங்களி னாலே முனிவர்களையும், அன்னங்களினாலே அதிதிகளையும், பூதபலி கரு மத்தினாலே பூதங்களையும், திருப்திசெய்தலே ஐம்பெருவேள்வியா மென் பர். இவ்வைந்தும், முறையே குதம், பிராசிதம், அகுதம், பிராமியகுத ம், பிரகுதம், என்ற பெயர்களாலும், வழங்கும். இவ்வைம்பெரு வேள் வியை,

"அத்யாபநம் ப்ரஹ்மயஜ்ஞ: பித்ருயஜ்ஞஸ்து தர்பணம்||
ஹோமோதைவோ பலிர்பௌதோ ந்ருயஜ்ஞோதிதிபூஜநம்||
என்னும் (மனு 3-70) ஸ்மிருதி போதத்தாலு மறிந்துகொள்க—

*மூன்று தெய்வந் துய்த்தப்பால் வாழுதிர் என்றது முதலியவாகச் சாபவிமோசனங் கூறுமுண்மையை,

"துர்வாஸௌவாச—ஆபயாஸோமுநிவரம் வர்ஷத்ரயம் இதம் வரம்|| அநுபுங் க்ஷ்வப்ரயாஸேந பச்சாத்ஸ்வஸ்தோ பவிஷ்யஸி||
அதோச்ச்வம் சாபநிர்ம்முக்தா பாரத்வாஜஸ்யதீமத:||
தந்முநே க்ருபயாதேவ சாபந்நிர் முக்தவாந்பவேத்||
சாபமுக்திம் ததச்ருத்வாபஹு சந்தோஷமாதராத்|| வ்யாஜஹா ரஸ புச்ச்யாதா சாலிகம் சாலிகோத்ரகம்|| அதாவது,—துருவாசர்

சொன்னதாவது, இந்த வரமானது மூன்று வருஷம் அந்த முனிவரரை யடையக்கடவது. பிரயாசத்துடன் அதனை நீவிர் அநுபவிக்கக்கடவீர். அப்பால் சௌக்கியமுள்ளவராவீர். பிற்பாடு புத்திமானாகிய பரத்துவாசமுனி புத்திரர் (மார்க்கண்டர்) கிருபையினாலே சாபவிடுதியைப் பெற்றவராவீர் (என்றார்). அந்த சாபவிடுதலையை சந்தோஷமாகக் கேட்டுச் சாலிகரும் சாலிகோத்திரருஞ் சொல்வதாவது,—

என்னும் பிரமாண்டபுராணவசனம் நன்குவலியுறப்பதுணர்க. இதனாலும், அடுத்துவரும் "ஆஸ்தாந்ஜாதே மூநேசாபம் மார்க்கண்டேயாச்ரமம் ப்ரதி|| கச்சாமயிதி நிச்சித்ய குண்டிகா தண்டபாணிநௌ|| ஜடா வல்கலயாயுக்தௌ மார்க்கண்டேயாச்ரமம்கதௌ" அதாவது, முனிவருடைய சாபமிருக்கட்டும்; மார்க்கண்டேயராச்சிரமத்தைக் குறித்துப்போவோம். என்று நிச்சயஞ்செய்துகொண்டு தண்டுகமண்டலங்களைக் கையிலுடையவராய், சடைமரவுரியுடையவராய் மார்க்கண்டேயராச்சிரமத்தையடைந்தார்கள்.

என்ற வசனத்தாலும், பரத்துவாஜசுதர் மார்க்கண்டேயரென்று கேட்கப்படுகிறார். ஈண்டுக்கூறியவர் துருவாசர். இவ்விருவருமொரு காலத்தவராதல் ஸ்பஷ்டமாம். இவ்விருவரையும் விசாரித்தறியவேண்டிய தாவசியகமாதலின் விசாரிப்பாம்.

"ஸ்ரீகண்ட வுருத்திரரினின்றுந் துருவாசருதித்தனர். இவரொடு ஸ்ரீகண்டராலே தீக்ஷிக்கப்பட்ட விருடிகள்—கவுசிகர், காசிபர், பாரத்துவாஜர், கவுதமர், அகஸ்தியரென்னும் ஐவராவார். இவர்களுக்கு மிவர்கள் சீடர்களாகிய சநற்குமாரர், சநகர், சநாதனர், சநந்தனர், என்போருக்கும்—பாரதவருஷத்துப் பரதகண்டத்திலே முக்கியமாகிய கதம்ப விருஷத்தினாலலங்காரமுற்ற ஆமர்த்தகமெனப் பெயரிய ஆச்சிரமமொன்று துருவாசரால் ஸ்தாபிக்கப்பட்டது." என்றறிவுறுக்குஞ் சித்தாந்த சாராவளி போதத்தாலுண்மையாகிற துருவாசரும், பாரத்துவாசருமாகிய இருவரும் ஆதிசைவோத்தமர்களாயிருந்திருக்கிறார்கள். அன்னார்தாமோ? என்று விசாரிக்குமிடத்து, ஆதிசைவர்பாலிவ்வாரியர்செல்லவும், கோட்சொல்லவும், வழியில்லையாதலின் அவரல்லரென்பதும் பெற்றாம். பின்னை,

பிருகு, மரீசி, புலகன், அத்திரி, அங்கிரா, புலத்தியன், கிருது, வசிட்டன், தக்கன், என்னும் நவப்பிரமாக்களுள்ளே அத்திரி முனிவருக்கு அநசூயையவயிற்றிலே சந்திரன், துருவாசன், தத்தாத்திரேயன், என்னு மூன்று மக்களுண்டாயிருந்தன ரென்று கேட்கப்படுகிற மூவருள்ளொரு

வராகிய திருவாசரே ஈண்டுக்கூறப்பட்டவராவாரென்று தெரியவருகிறது. இவரே முன்னரிந்திரனுக்குச் சாபங்கொடுத்தவரென்றுஞ் கேட்கப்படுகிறார். இவர் காலத்துப் பரத்துவாஜரோ? அவ்விந்திரபுரத்துக்குக் குருவாயும் புரோகிதராயுமிருந்த வியாழமுனிவருடைய புத்திரராவார். அந்தவுண்மை,

"நவப்பிரமாக்களுள்ளே அங்கிராவென்பவருக்கு மிருதி வயிற்றிலே சிகண்டி முனிவர் பிறந்தனர். அச்சிகண்டி முனிவருக்கு உசத்தியன், வியாழன், என்னுமிரண்டு மக்களுண்டாயிருந்தனர். அவ்விருவருளிளையோராகிய வியாழமுனிவர் (பிரகஸ்பதி) தேவகுருவாயினார். அத்தகையோர் ஒரு தினத்திலே ஒரு திவ்விய நட்சத்திரோதயத்தைக்கண்டு இற்றைக்கோர் புத்திரோற்பத்தி செய்யவேண்டுமென்று கருதினவராய்த் தமதாச்சிரமத்துட் புகுதவும், அங்கே தமது பத்தினிதாரையைக் காணாமையினாலே தமையனார் பத்தினியைக் கைப்பிடித்தனர். அவள் கொழுநனை நோக்கி ஓ தேவாசிரியரே! இஃது மக்கழகன்று; தமையன் மனைவியைத் தாய்க்குச் சமமாகக் கருதவேண்டுமென்னும் நியாயசாஸ்திர முமக்குத் தெரியாததல்ல; மேலும் நானிப்போது கருப்பமாயிருக்கிறேன்; என்னை விட்டுவிடுமென்று மிகக்கெஞ்சி வேண்டினாள். ஆண்மை மிக்க வியாழமுனிவர் விட்டாரிலர். வலுவந்தப்படுத்துச் சேர்ந்தபொழுது அவளது கருபத்தினுள்ளிலுள்ள சிசுவானது வேறொரு சிசுவிருத்தற் கிடமில்லையாதலி னீண்டிடந்தரேனென்று வித்தையுட் பிரவேசிக்கவொட்டாதபடி வழிமறைத்து நின்றது. அது கண்டு,

"..................களியிற்போகம் புதைத்தநின் றனக்குப்போக விழியெனச் சபித்து நீங்க" என்ற வேதாரணிய புராணக்கூற்றின்படி (வேறொரு சகோதரன் வருவதற்குநீ) மகிழாமல் போகத்தானமாகிய பெண் குறியிற் கருப்பநாடியைக் கீழ்படுத்துநின்ற வுனக்குக் கண்ணவியக்கடவது என்று சபித்து, வித்தையுட்பதித்துவிட்டுப் பிரகஸ்பதி முனிவர் போனார். அப்பால் முந்திய சிசுவுடன் பின்னரும் வைக்கப்பட்ட இச்சிசுவுங் கூடியிருந்து வளர்ந்தது. கருப்பமுதிர்ந்து இரண்டு பிள்ளைகளும் பிறந்தார்கள். அவ்விருவருள் உசத்தியமுனிவருடைய வித்தாகிய முந்திய பிள்ளையானது சிற்றப்பன் சாபத்தாற்குருடாகவிருந்தது. அந்த ஏதுவாலதற்குப் பூரணமான குருடென்ற பொருட்டும் 'தீர்க்கதமன்' என்ற பெயரிட்டார்கள். அடுத்த சிசுவுக்கு அந்நியவித்தாகி இரண்டாவது வைக்கப்பட்டிருந்து பிறந்தது என்ற பொருட்டும் பரத்துவாஜன் என்ற பெயர் வைக்கப்பட்டது, இவ்விருவருள் தீர்க்கதம முனிவருக்குக்

கக்கீவமுனிவரும், பரத்துவாஜமுனிவருக்கு மார்க்கண்டரும், பிறந்தார்களென்று கேட்கப்படு மொருகதையால் நன்கு போதாலுணர்க.

இதனாலே வியாழமுனிவருடைய பௌத்திரனாகிய மார்க்கண்டராற் சாபவிமோசனமாமென்று, அவ்வியாழ முனிவருக்கு ஒரு முறையிற் சிற்றப்பனாகிய துருவாசமுனிவர் கூறினாரென்று தெரியவருகிறது. இங்கே அத்திரிமுனிவரும், அங்கிராமுனிவரும், சகோதரர்களாதலின் அத்திரிமுனிவர் மகனாகிய துருவாசமுனிவர்: அங்கிராமுனிவர் மகன் பிள்ளையாகிய வியாழமுனிவருக்குச்சின்னப்பாட்டனார் மகன் (சிற்றப்பன்) என்பதுஞ் சூசிப்பிக்கப்பட்டது. அந்த முறையில் துருவாசமுனிவர் ஈண்டுக்கூறப்பட்ட மார்க்கண்டருக்குப் பீட்டன் (இரண்டாம் பாட்டன்) முறையினராவர் போலும். இவ்வளவே எனதாராய்ச்சியிற் புலப்பட்டதோ ருண்மையர்த லறிக.

ஈங்கெடுத்துக்காட்டிய கதையிற் கேட்கப்படும் வியாழமுனிவருடையசெயலான் மனம்வருந்திய அந்தம்மாள்(உசத்தியமுனிவருடைய மனைவி) அழுத கண்ணீரானது வீண்போகாதபடி அவ்வியாழ முனிவருடைய மனைவி தாரையின் மனத்தைப் பிராந்தாகச்செய்தது. அந்த ஏதுவால் அவள் துருவாசருடன் பிறந்த சந்திரமுனிவரை விடாது தொடர்ந்து அவர் மனதைக்கவர்ந்து அவரை வசப்படுத்திப்புணர்ந்து புதமுனிவரைப் பெற்றனள். அதை மறைத்துவிட வொட்டாமல் புத்திர வழக்குண்டாயிற்று. ஆகவே சந்திரனுக்கே புதனைப்பெற்றேனென்று நியாயசபையிற் றுரை கூறிவெளிப்படுத்திவிட்டாள். அது செவிக்கேறவே; வியாழ முனிவர் இருளி மேலிட்டுப் பொருளையுமிழந்து வல்லவியையழைத்துக் கொண்டுபோயில்லமடைந்தனர். என்றால் பரஸ்திரீ கமனத்தால் வருந் தோஷத்தைத் தேவகுருவுமன்றோ அனுபவிக்கலானார். அப்படியாயின் அம்மம்ம! அது மிகக்கொடியதன்றோ! அத்தகைய பரஸ்திரீ கமனத்தில் புத்தியைச்செலுத்துகிறவன் தன் குடும்பப் பெண்களின் கற்பழிவுக்குக் காரணனாயிருக்கிறானென்பது புத்திமான்களது சித்தாந்தமேயாம்.

அத்தகைய சித்தாந்தத்தாலேதான் பிரமசுதராகிய சாலியர், சாலிகரென்னு மிருவரும்: ஆதியிலே நவப்பிரமாக்களு ளொருவராகிய தட்சப்பிரஜாபதியினுடைய சுதைகள் (பானு, வசுவென்னுமிருவரும்) பெற்ற தேவதத்தை, சித்திராங்கிகளை (தருமதேவரின் தனையைமாரை) மணந்து பெற்ற சாலிக, சாலிகோத்திரா ளிருதரத்தாருக்கும், இந்த மாதிரியிற் றிரிந்து நிறைகெட்டுப்போனவழியிலே பெண்களை டெடுக்காதவராகித் தாங்களிரண்டு கோத்திரக்காரர்களாதலின் சம்பந்திகளாகி ஒதுங்கியிருந்

மன்னும் பரத்துவாசரநுண்மகவாம் மார்க்கண்டேயரினல், இன்னசாப விமோசனமா மென்றர் சென்றரிவர்மீண்டார், பின்னர்சாலி கோத்திரநட் பெரியா ரோருவரோருவரைப் பார்த், துன்னி னிவர்முற் கோபி யுயிர்க்குயிராஞ் சிவனு னிகழ்விதென்றர் (கூ)

அணுவோன்றேனு மவனனசைக்கா *தசைமோ? வசைக்கு மிறையருளால். நணுதந் துயநு நலத்திநுக்காம் நாமதுணர்ந்தும் நலிவதேன்னே? பணுநல்லறனே வளர்க்குநமர் பதமு திவணுற்றேது வரினும், உணுமாறிநத்தி ‡மார்க்கண்டநுழைப்போய்க் கலந்துவருவமேன்ருர். (ய)

து கொண்டார்களென்று தெரியவருகிறது. இவர்களிப்படி யொதுங்கிக் கொள்ளவும், அவ்வியாழ முனிவரைச்சார்ந்த விருடிமரபினரியாவரும் தேவகுரு தமையன்மனைவியைச்சேர்ந்தது போலும், தேவகுரு மனைவியைச் சந்திரன் சேர்ந்ததுபோலும், வழக்கத்துக்குக் கொண்டுவந்த ஆரியாநுஷ்டான பராரயினுர்கள். அந்த வுண்மையை வலியுறுத்தற்காகவே "நதிமூலம் ரிஷிமூலங்களைக் கேட்கப்படாது" என்றதொரு பழமொழியும், அவர்களாற் போதிக்கப்படுமெந்திரமாக வழங்குகின்றது, ஆரியாநுஷ்டானத்தில் பிறர்மனைசயத்தலாற் றோஷமில்லையென்றே உத்தாலகமகருஷிகாலம் வரைக்கு மோரெண்ணமுண்டாயிருந்ததாம். அப்பால் அவரது புத்திரராகிய சுவேதஹேதுவானவர் தங்காலத்திற், பிறர்மகைக்கிடமாகிய அத்தோஷத்தைத்தம்மவரினின்றும் நீக்கவேண்டுமென்று முயன்றவராகி 15-வது விவாஹப்படலத்திற் கூறியபடி சில சட்டங்களை யேற்படுத்தியிருக்கிருர். அதுமுதலவர்களுஞ் சிறிதுசிறிதாகச் சீர்திருந்திவருகின்றனர். அவ்வாறன்றி,

தொன்றுதொட்டின்றளவும், இனிமேலும், ஆக எஞ்ஞான்றும் சாலிக சாலிகோத்திராளிருதாத்தருள்ளேயும், நிறையறிவோர்ப்புக்கடைப்பிடி யென்னும் ஆடூஉக்குணம் நான்கினையுங்கட்டாயமாக ஆண்மக்களநுட்டிக்க வேண்டுமென்றும், நாணமடமச்சம் பயிர்ப்பென்னு மகடூஉக்குணம் நான்கினையும் பெண்மக்களநுட்டிக்க வேண்டுமென்றும், ஒரு வழக்கைச் சதாசாரமாகக்கொண்டநிறையுடைமையினுலேயே உலகவறிவாலுயர்ந்தவரும், சைவாச்சாரமுடைமையினுலேயே பரஞானத்தாலுயர்ந்தவரும், ஒரு சுத்தஜாதியாக மதிக்கப்பட்டவருமாகிய இவர்களதேற்றமுமிங்கே நாம் கவனிக்கத்தக்கதொன்றும்.

* அசைமோ? = அசையுமோ? இவ்வினுவிலுள்ள ஓகாரம் எதிர்மறையாக நின்று அசையமாட்டா தென்னும் பொருடரல் காண்க.

காணினும், அசைதலசையாதுநிற்றல்கள் சடத்திற்கேயியையுமாதலா லதனை (அசையமாட்டாதென்பதை) இங்கே சார்புபற்றிச் சடத்தொடு சையுக்தசமவாய சம்பந்தியாயிருக்கு மான்மபோதத்திற்கு மியைபாகக் கொண்டறிதலே மரபாம். அந்த மரபில்,

"சிவன்சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னிற்
சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித் தவன்றான்
பவங்கேடு புத்திமுத்தி பண்ணுஞ்சித் திவற்றிற்
படியுஞ்சித் தறிவிக்கப்படுஞ்சித்த மிவன்றான்
அவன்றானே யறியுஞ்சித் தாதலினா லிரண்டு
மணைந்தாலு மொன்றாகாதநந்நியமா யிருக்கும்
இவன்றானும் புத்தியுஞ்சித் தவனுமோ புத்தி
யிதுவசித்தென் றிடிலவனுஞ் சிவனுமசித்தாமே" என்

னுஞ் சுருதிபோத,விசாரமுடையராய சாலிக சாலிகோத்திரத் வலைவரிருவரும் சித்பிரபஞ்ச மசித்பிரபஞ்சமென்னு மிரண்டனையு முறையே யறிவித்து மசைப்பித்தும் நிற்பவர் சருவவியாபகராகிய சிவபிரானாரே யாயிருத்தலின் அவையறியாமலும், அசைவியாமலும், இத்துருவாசரிங்கேவரவும் மனமறிந்தியாதோ ரபசாரமுஞ் செய்யாத நம்மைக் கோபிக்கவும், அதனாலே நாங்கவலுறவும், நிகழமாட்டாவெனக்கருதினவராகி இவ்வாறு நிகழுமிறைவன்செயல்களெல்லாம் தீமைசெய்யாத நன்மையாளருக்குத் துன்பம் பயப்பபோற் காணப்பட்டாலும் முடிவிலத்தனையும் நன்மைகளேயாகி யின்பம் பயப்பவாகவே புலப்படுதனிச்சயமென்னு முறுதியுடையவரேயாயிருந்தன ரென்றுணர்க.

§ மார்க்கண்டர் என்பது: ம்ரு+கண்டக எனப்பிரிந்து ம்ரு=மரணம், கண்டக=தடை என்னும் பொருள்தரலான் காலமிருத்தியுவையுஞ்ஜெயித்த அம்முனிவருக்குக் காரணக்குறியாக மார்க்கண்டர் என்னும் பெயர் வந்திருக்கலாம் போலும். அப்படியாயின், ம்ருகண்டக என்றது அவுணதிகவழக்கில் ககர ஈற்றிற்கு லோபமும், முதல் நீட்டமுங்கொண்டு மார்க்கண்டரென வழங்கிவந்ததாகும். இதே நாமத்தால் வழங்கும் மற்றொருவரு மிங்கிருந்திருக்கிறார். அவர் மிருகண்டு புத்திரரென்று கேட்கப்படுகிறார். அவருடைய வுற்பவத்தை விசாரிக்குமிடத்து, நவப்பிரமாக்களுளொருவராகிய பிருகு முனிவருக்குக்கியாதி வயிற்றிலே இலக்குமி, தாதா, விதாதா, என்னு மூன்று மக்களுண்டாயிருந்தனர். அம்மூவருள் மூன்றாவதாய விதாதா வென்பவர் மேரு புத்திரிகளாகிய ஆயதி, நியதி

அவ்வாறிசைந்தா ரிருவரும்போ யருண்மார்க் கண்டர் தமைக்கண்டார், செவ்வாய் மலர்ந்தே நன்றுவினாய்த் திருந்தா சனத்தாககின ரிவர்மேய், உவ்வோய்! சைவநெறிப்படுமெம் முழைநேற்றுவந்தார் தருவாசர், நவ்வாம் பணிகொண் டுவந்து பொருணயந்தாரிலதா லிலையென்றோம் (௰௧)

வன்பாச் சினந்தே கினரவர்பின் வந்தோ தவ! *விந்திர னவன்றேல், முன்பாச் சிவநின் மாலியத்தை முனிய முனிந்தீரெ துசெய்தோம்?, அன்பா ரெமையின் றுருத்தலழகாமோ? வாசி தருதிரென, வின்பாயுமாற்றீர் வாமென்னுமூன் றியாண்டெல் லையுக்கூ றினர்சென்றார் (௰௨)

யென்னுமிருவரி விளையாளாகிய நியதியை மணந்து மிருகண்டுவைப் பெற்றார். அவருக்கு "ம்ருகண்டு" என்னும் நாமமானது மிருகங்கள் வந்துதினவுதிரவுரிஞ்சும்படி ஆவுரிஞ்சுதறியேபோலும், ஸ்மரணையற்றுத் தவத்திலிருந்தவர் என்னும் பொருள்காட்டி நிற்பதாமென்பர். அன்றியும், வேறு மிருகசிருங்கருடைய குமாரர் ம்ருகண்டு என்பாருமுளர். எப்படியாயினுமாக. அந்த மிருகண்டு புத்திரரும், மார்க்கண்டேயரென்ற பெயராற் பிரசித்த மடைந்தனர். இவரே அகத்தியனாருடன் முருகக்கடவுளிடத்தில் தமிழ்கேட்ட மார்க்கண்டேயனா ராவர். இறைவரெமனையுதைத்து மார்க்கண்டேயரை யாட்கொண்டருளினாரென்றுகேட்கப்படுங் கதையுமிவருடையதேயாம். இவருக்கு வேதசிரன் என்னுமொருபுத்திரருமுள்ளார். மார்க்கண்டேயரென்றால் மிருகண்டு புத்திரரென்ற பொருடருவதொரு நாமமேயாமென்பார் பெரியோர். அத்தகையபெயர் பரத்துவாஜர்சுதனுக்கு வழங்கக்காரணமென்னை? யெனின்;—மார்க்கண்டர் = மிருத்தியுவைச் செயித்தவர். என்றொரு பொருளுந்தருதலின், இந்தப் பரத்துவாஜர்சுதராகிய மாக்கண்டரே சப்தருஷிகள் கூட்டத்தில்வைத்தெண்ணப்படுகின்றாராதலின், சப்சருஷிகள்காலமிருத்தியுவையுஞ்செயித்தவரென்றுசேட்கப்படுகின்றாதலின், அந்தவழக்கிற்பரத்துவாஜசுதருக்கும் மார்க்கண்டரென்றபெயர்வந்திருக்கலாம்போலுமென்க. அன்றேல்மார்க்கண்டேயர் என்ற பெயரைப் பொறுத்தாராயுமிருக்கலாம். என்றறிக.

* இந்திரன் அவன்றேல் முன்பாச் சிவநின்மாலியத்தை முனிய முனிந்தீர்—என்றது,— (முன் னொருகாலத்திலே) தேவேந்திரனும், அவன் (பட்டத்து)யானையும். சிவப்பிரசாதத்தை வெறுத்தலால் (அவ்விருவரையும் நீர்) சபித்தீரென்ற பொருடரல் காண்க.

வந்தோ மதனாற் காப்பிரென்றார். மகிழ்ந்தோ வருளந்தணி
ர்! நீவிர், உந்தாதரவா லுலகுபுகழுதாரர் மாசா திக்களன்றே,
§ வெந்தோ தகமே தஞ்சலிர்கோன் விளங்கி யருள்வ னறம்பே
ணிச், சந்தோடத்தோ டிருமினும்மூர் தனியென்ன் றுரைத்தார்
பினுமுரைப்பார் (௰௩)

$ பிறழ்வாய்ப் பனவர் சிலருமது பெருமைசகியா தழுக்
காற்றால், மறமீக்கொளுமத் தவர்பாற்போய் வழூஉக்கோட் சொ
லலின் மயங்கியுங்கள், உரமூழ் வழிச்சி றினர்பிறகவ் வுண்மை
யுணர்ந்தார் பொய்பேசுந், திறனா லவரை யுண்டுங்கச் சினந்
தார் சபித்தா ரதுகேண்மின் (௰௪)

பெருத்தபொருள்வைத்திட்டிகளே பேணுகிலர்மா சைவ
ரென்றீர், £ அருத்த னீர்! நும் பிசிபகர்வாய்க் கரிசிக்கலைவீர்
† பிறர்பொருள்கொள், கருத்தாற் கவன்றும் பொருட்குமறை
கற்பித்துப்பே யாவிரன்ன, விருத்தியீர்! நல் குநருமையில் வெறி
யாக்குநரா குவரெனிட்டார். (௰௫)

---

§ வெந்தோதகம் எது அஞ்சலிர்—என்றது,—கொடியவருந்த மும்
களுக்கில்லை. ஆதலிற் பயப்படவேண்டா மென்னும் பொருளைத்தரும்.

$ பிறழ்வாய்ப்பனவர் சிலர்:=மனதி லொன்றுகொண்டு வாக்கி
லொன்று பேசுவோராகிய சில வேதியர்.

£ அருத்தனீர்!=பழிக்கப் பட்டவர்களே! (பிட்சை யெடுக்கிறவர்களே!)
இஃது அருத்தனம், அருத்தனையென்பன கடைகுறைந்து 'அர்' விகுதி
புணர்ந்து அருத்தனரென்னு முயர்திணைப் பன்மைப் படர்க்கைப் பெய
ராகி முன்னிலை விளியில் அருத்தனீரென நின்றதென வுணர்க.

† பிறர்பொருள்கொள் கருத்தாற் கவன்றும், பொருட்கு மறை
கற்பித்தும் பேயாவிரென்றது:—

சரீரப்பிரயாசையோடுழைத்து வைத்திருக்கும் பொருளாளரை
நோக்கி அப்பொருளவருக்கு எப்படி வந்ததென்றாகித்துணர்ந்து அவர்
போலு முயன்று பொருளாக்கப்பாராமல், கழிசோம்பேறிகளாகி வீண்
பொழுதோட்டிவறுமைக்குட்பட்ட அஞ்ஞான்று "ஈ யென்கிளவி யிழிந்
தோன் கூற்றே" (தொல்) 'ஏற்ப திகழ்ச்சி' (ஆத்தி) என்றபடி அறிஞ
ருக்கொவ்வாத இழிதொழிலுட்புக்குழன்று எனக்கொரு வீடுகட்டவேண்
டும்; என் பிள்ளைக்கு உபநயம் பண்ணவேண்டும், என் பெண்ணுக்குக்

கலியாணம் நடத்தவேண்டும்; என்பது முதலியனகூறித் தன் சுயஜாதிகளைவிடுத்து அன்னிய ஜாதிகளுடைய பொருள்களைக் கவர்ந்துண்ணுகின்ற விப்பிரனும், கூலிக்கு மறைகற்பிக்கும் பனவனும், அலகையாகப் பிறப்பனென்னுஞ் சுருதிபோதமே யீண்டிவருக்குச்சாபமாக வந்ததென்றறிவுறுத்திற்று. இதனாலே பெரியோர் சினந்து கூறினு மவர்வாக்குச் சுருதி சம்மதமாகவே வெளிப்படுமென்பது மிங்கே கவனிக்கத்தக்கதாம். பிறர்பொருள் கவர்வோ ரலகையாகப் பிறக்குமுண்மையை, வேதாரணியபுராணம் பிசாச விமோசனச் சருக்கத்தில்:—

“தென்னாட்டிலுள்ள கௌசிகனென்னுமோர்பிராமணர் காசியாத்திரைக்குச் சென்றார். அவர்கங்கா தீர்த்தமாடி, விசுவேசரைவணங்கி கயாசிரார்த்தமு நடாத்தி, காவடியொடுகூட விந்தியகிரிக்கு வந்து சேர்ந்தனர். ஆண்டு விசுவநாதரை மனத்திலிருத்தியவராய், பஞ்சாக்கரத்தை நாவிலுச்சரித்தவராய், வந்த அக்கௌசிகரையுண்ணும்பொருட்டு இரண்டு பேய்கள் விரைந்தோடிவந்தன. வந்தாலுங் கிட்டிவர முடியாமற் றூரத்தினின்றுகொண்டு ஓ ஆய்ந்த நூனெறியந்தண! நீயுச்சரிக்குஞ் சிவநாமமானது உன்னையடுத்துப் பிடித்துக்கடித்துத் தின்னவொட்டாதபடி பேய்களைக் காய்ந்து துரத்துகின்றது; இதுகாறும் நாங்களுண்ட எத்தனையோ வேதியர்கள் எங்கள் வயிற்றிடைக் கரைந்து மாய்ந்து போயினர்; அவரிலொருவனாயிராமல் தப்பிப்போதற்குள்ள சத்திபதிந்த நீ யொருபெருவரத்தோயாயினை; ஆனபடியினாலே உனக்கியாமடைக்கலம்; எங்களுக்கிந்தப் பேய்ப்பிறப்பை யொழித்து நற்கதிதந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தன.

அதுகேட்ட கௌசிகர்: ஓ பேய்களே! இறைவனாலாகத்தக்க காரியத்தை யென்பாற் கேட்கின்றீர்களே? நான் அதற்காகச் செய்வதென்னை? என்றனர். அதற்கு அப்பேய்கள்: நீர் செய்வதாவது, எங்களுக்கிரங்கி உமதூருக்குப் போவதைவிடுத்து, மீண்டுங் காசி முதலியதிருப்பதிகட்குச்சென்று, ஸ்நானம் சிராத்தாதி கன்மம் சிவசேவையாதிகளை யெமக்காகச் செய்தால் நாங்கள் கதி பெறுவோமென்றன. அப்படியே செய்வதாகத் துணிபுற்ற அக்கௌசிகர் மறுபடியும் பேய்களைப்பார்த்து ஓ அலகைகளே! நீங்களிவ்வாறாதற்கு ஆதிக்காரணமென்னையென்று வினவினார். அக்கேள்விக்கு ஒரு பேய்;

நான் பூருவத்தில் அழகிய பிராமணனாகப் பிறந்திருந்தேன். அந்நாளிலியான் சருவசாஸ்திரங்களையு மறிந்தவனாயிருந்தும் முன் கருமத்

தொடர்பினாலே, பொருள்தேட வேண்டிய வழிகளைவிடுத்து ஒரு வேளாண்டலவனையடைந்து, அவனை வசப்படுத்திப் பொருள் கவர்ந்தும், கூலிக்கு பிற த்விஜனுக்கு, வேதாப்பியாசம்பண்ணிவைத்துஞ்சீவித்தேன். ஆதலினாலே, நானிறந்த பின்பு இப்பிசாசின் சொரூபத்தையடைந்து பல வுயிர்களையுங்கொன்று தின்றுழல்கின்றனன் என்று கூறிற்று. அப்பால் மற்றொரு பேய்,

ஐயரே! நானுமொரு பார்ப்பான்றான். செல்வப்பெருக்காலும், வேதங்களெல்லாம் நன்குணர்திறனாலும், யாவராலுமிகமதிக்கப்பட்டிருந்தேன். அப்படியிருக்குங்காலத்திலே கலிங்கதேசத்திலே வேசையர் மையலிலேயகப்பட்டுப் பிதிரார்ச்சிதமியாவையுந் தோற்று வீடு நன்செய் புன்செய் பாத்திர பண்டங்களை யெல்லாம் விற்றொழித்து, மிக்கதரித்திரனாகிக் கிழப்பருவத்துப் பெற்றோரையும் பேணவழியில்லாமற் காசிக்குப்போய் பிட்சையெடுத்துண்டு கொண்டிருந்தேன். ஆண்டொரு தினத்திலே, இரவிற் படுக்கவிடந்தந்த வொருவீட்டிலே, அனைவருமுறங்குஞ் சமயத்திலே, வீட்டெஜமானன்றலையிலே ஒரு கல்லையேற்றிவிட்டு உள்ளே நுழைந்து, அணிபணியாதிகளைக் கொள்ளையிட்டுக்கொண்டுபோகையில் ஊர்காவலர் தொடர்ந்து என்னைப்பிடித்து அடித்து வாளாற்குத்திக் கொன்றுபோட்டார்கள். அந்நாள் நான் செய்தபாதகத்திற்காக அலகையாயினனென்று கூறிற்று.

அவ்வாறு பேய்களாற் றெரிவிக்கப்பட்ட வர்த்தமானங்களைத் தெரிந்துகொண்ட கௌசிகர் மீண்டுங்காசிக்குச்சென்று தீர்த்தஸ்நானம், சிரார்த்தாதிகன்மம், ஈசுவரதெரிசனைகளைச் செய்து பிரார்த்தித்தவராகி, அப்படியே பிரயாகையிலுங் கயையிலும் போய்ச்செய்தலால் அப்பேய்கட்கு முந்தியவடிவு நீங்கித் தேவசொரூபங்கிடைத்ததென்று போதிக்கப்படுமொருகதையாற் புத்திமான்கணன்குணர்ந்து கொள்ளுவர். இஃது வெறுங் கதைபோலுமாகாமல் சுருதிசம்மதமாக நடந்ததேயாகும். அந்த வுண்மையை,

"த்ரிஷ்வப்யேதேஷு தத்தம் ஹிவிதி நாப்யார்ஜிதம் தநம்||
தாதுர்ப வத்ய நர்த்தாய பரத்ராதாதுரேவச|| அதாவது (தருமமறிந்தவன்; பூனையைப்போலச் சூதுள்ளவன், கொக்கைப்போலச் சமயம் பார்த்துக்கொண்டிருப்பவன்,) இந்த மூன்றுபேர்களுக்கும் நியாயமாகச் சம்பாதித்த பொருளைக் கொடுத்தாலும், கொடுத்தவனுக்கு உடனே தீங்குண்டாகும். வாங்கினவர்களுக்கு இறந்தபின் தீங்குண்டாகும். என்

னும் [மனு 4-193] ஸ்மிருதி போதத்தாலும் நன்ருகத் தெரிந்துகொள்ள லாம். ஆதலினுலேதான், மூடஜனங்களை யேமாற்றிப் பிராமணருக்குக் கொடுத்தால் நன்மைவிளையுமென்று பொய்பேசி யாசிப்பவருக்கு அவர்க ளிறந்தபின் பிசாசத்துவம் வருமென்றறிவுறுத்தலுடன், அங்ஙன மவர் அலகைத்துவம் பெற்றுழலுமாறே அவருக்குக் கொடுக்குங் கொடையா ளருக்கு அக்கொடையால் விப்பிரரையலகைகளாக்கிய தோடமுமுண்டா குமென் றடுத்துச்சூசிப்பிக்கப்பட்டதூஉ மிங்கே கவனிக்கத்தக்கதாம். அப்படியன்னியில்,

"பாத்திரமறிந்து பிட்சையிடு

கோத்திரமறிந்து பெண்ணையெடு" என்னுமுதுமொழிதானு மிற வாசிலைபெற்றிலங்குமா? அன்றியும்,—

"தாநதர்மந்நிஷேவேத நித்யமைஷ்டிக பௌர்திகம்||

பரிதுஷ்டேந பாவேந பாத்ரமா ஸாத்யசக்தித:|| அதாவது, தாநதர்மக்கள் செய்தாலும், மனக்களிப்போடு நல்லவிடத்திலும், நல்ல பாத்திரத்திலும் செய்யவேண்டியது. என்று (மனு 4—227) ஸ்மிருதி போதந்தானெழுமா? மேலும்,—

பிட்சைவாங்கத்தக்கார்.

"மாண்புடையாளர், கேண்மையர், தத்தம் வழிமுறை யொழுக்கினி லமர்ந்தோர்,—சேண்படுகிரப்பி னெய்தினோர், புரப்போர், தீர்ந்தவர், தந் தைதாய், குரவர்,—காண்டகு முதவிபுரிந்துளோர், இனையோ ரொன்ப தின் மருமுளங்களிப்ப— வேண்டுறு நிதியமழிப்பின்மற்றொன்றே கோ டியா மெனமறை விளம்பும்" என்றும்,—

பிட்சையிடுதற்காகாத அபாத்திரர்.

"முகனெதிரொன்றும் பிரியின்மற்றொன்றும் மொழிபவர், விழை வுறு தூதர்,—அகன்றகேள்வியிலார், அருமருத்துவர்கள், அரும்பொருள் க வருநர், தூர்த்தர்,—புகலருந்தீமைபுரிபவர், மல்லர், செருக்கினர், புன் றொழிற்றீயோர்,— இகழ்தருமினையோ ரொன்பதுபெயர்க்கு மீந்திடல் பழுதென விசைப்பார்." என்றும், வரையறுத்தறிவுறுக்கப்பட்ட காசி கண்டபோதங்களாமுண்டாமா? இத்தகைப சுருதிபோதங்களை யுணர்ந் த பிராமணோத்தமர்கள்,

"நலோகவ்ருத்தம் வர்தேத வ்ருத்திஹேதோ: கதஞ்சந||

அஜ்ஷ்மாமசடாம் சுத்தாம் ஜீவேத்பராஹ்மண ஜீவிகாம்||"

அதாவது பிழைப்புக்காக விகடஞ்செய்யவும், துஷ்டவார்த்தைகள் சொல்லவுங்கூடாது. பொய், டம்பம், கோள், இவைகளில்லாத்தான பிராமணவிருத்தியைத் தேடிப்பிழைக்கவேண்டியது. என்னும் (மனு !—1!) ஸ்மிருதி போதத்தின்படி நல்லொழுக்க முடையவராயிருப்பின், அந்தக்கருமாநுஷ்டானமுள்ள கிரகஸ்தருக்குக் கஷ்டம்நேரிட்டாலும், அவர்கள்:

"ராஜதோதந'மந்விச்சேத்ஸம் ஸிதந்ஸ்நாதக: க்ஷுதா||
யாஜ்யாம்தே வாஸிநோர்வாபி நந்வந்யத இதிஸிதி:|| அதாவது அரசனிடத்து நின்றுவது, தன்னிடத்திலெக்கியஞ்செய்துகொண்டவனிடத்து நின்றுவது, தன்னுடைய சிஷியனிடத்து நின்றுவது, பொருளைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டியது. மற்றவர்களிடத்துத் தானம் வாங்கப்படாது. (மனு 4—33) என்றபடி அரசனிடத்தில், அல்லது தம்மவரிடத்தில் யாசிப்பார்களேயன்றிப் பிறஜாதியாரிடத்தில் யாசிக்கவேவரமாட்டார்கள். பிற ஜாதியாருக்கு அவர்கள்கொடுக்கிற வழக்கமுமில்லை.

அப்படியாகவே பிறஜாதியாரிடத்தில் யாசிக்கவருபவர் சற்பாத்திராரகவே மாட்டாரென்பதும் நிச்சயமாயிற்று. அத்தகைய அசற்பாத்திரருக்குக்கொடுப்பவனவர்களையும்பிசாசமாக்கித் தானுங் கேடுறுகின்றனென்பது அறிவுடையார்க்கெல்லாமினிதுபுலப்படும். இவ்வளவில் "காசைக்கொடுத்துக் கன்னத்திலடிபடுவோர்கள்" போன்று அப்பிராமணருக்குத் தானங்கொடுத்திடர்ப்படலாகாதென்றிங்கே விளக்கிக் காட்டப்பட்டதறிக. பின்னைத் தருமந்தானியாதெனின்,

சைவராவார் சைவருக்கும், வைணவராவார் வைணவருக்கும், மத்துவராவார்மத்துவருக்கும், ஸ்மார்த்தராவார்ஸ்மார்த்தருக்கும்,யாசிப்போருண்மையையுணர்ந்து ஜாதிவித்தியாசமே பாராட்டாமல் ஒழுங்காகவுதவுதலே யாம். அஃதே உத்தமமான தருமமாகி, அவரவர் மதங்களிற் போதிக்கிறபடி பலன்பெறுதற்கும் யோக்கியமாக விளங்கும்.

அவ்வாறே அவ்வமதங்களிலும் அநுட்டித்துவரும்படிதான் சட்டங்களுண்டாயிருக்கின்றன. அந்த வரம்பைக்கடந்து அறம்வளர்ப்போராகிய சைவர் அறிவீனரேமாற்றிலகப்பட்டுப் பிறர் தம்மவருக்கொருகாசுதானுங் கொடாதிருப்பதைக் கண்டிருந்தும், தாம்பிறருக்கீவது தர்மமா? அல்லது அதர்மமா? என்றுய்ந்து ஆலோசிக்கின் அவரது மனச்சாக்ஷியேஉண்மையையறிவுறுத்துதல்திண்மையாமெனவறிக. ஈண்டெடுத்துக்காட்டப்பட்ட கொடையினது விளக்கத்தை இதில் 20-வது புருடார்த்த போதகப்படலத்தில் நன்குணர்த்துதல் கொண்டு முணர்ந்து

அச்சுற்*றெண்மர் மரபினருமந்தோ! கெட்டோங் கெட்டனமால். துச்சமதியேமுய்யும்வகைசொலுமென் றிரப்பவழுஞ்சுதர்க்கு,

கொள்க. இங்கே கொடுப்பவரைக்காட்டிலும், பெறுவோர் பிசாசமாகாதீடேறவேண்டின், ஆவசியகமாக, "கிஞ்சித்வேதமயம் பாத்ரம் கிஞ்ஜித்பாத்ரம் தபோமயம்.| பாத்ராணும் உத்தமம்பாத்ரம் சூத்ராந்நம் யஸ்யநோதரே"|| அதாவது, கொஞ்சமாயினும்வேதந்தெரிந்தவன்சத்பாத்திரனுவான. கொஞ்சமாயினுந் தபசுடையவனும் சத்பாத்திரனெனப்படுவன். இந்த சத்பாத்திரங்களுள்ளே சூத்திரனுடைய அந்நமானது எவனுடைய வயிற்றிலில்லையோ, அவன் உத்தமமான சத்பாத்திரனுவான். என்ற ஸ்மிருதிபோதத்தை அங்கீகரித்துக்கொடுப்போரையுங்கெடாமல், தாமுங் கெடாதிருக்க முயலக்கடவராக. அன்றேல் பெறுவோரைப் பிசாசாக்கித் தாமுங்கெடாதவண்ணம் புண்ணியவான்களாயினுங் கவனித்துய்வாராக.

இஃதேபோன்று "ப்ருதகாத்யாபகோயச்ச ப்ருதகாத்யாபி தஸ்ததா||
ப்ராஹ்மணர்யேள நைச்சசம்பம் தைஸ்ஸம் யோகம்யதிதைர்கத:||
அதாவது, சம்பளம் வாங்கிக்கொண்டு வேதம்சொல்லி வைக்கக்கூடியவர் சத்கர்மத்தில் விலக்கப்பட்டிருக்கிறார்கள். (மனு 3—156) என்றபோதமும் இங்கே கவனிக்கத்தக்கதாதலறிக.

* எண்ணர்மரபின றென்றது:— பிரமதேவருடைய ஊர்த்துவானனத்தினின் றுமுண்டாய—சாலிகர், சாலியரென்னுமிருவருமுதிக்கும்போழ்திலேயே மற்றைய நான்கு முகங்களின் றுமுற்பவித்த இரணியர், ஜயமுனி, சத்தியர், சதனர், சாமானியர், தாபகர், காத்தியாயனர், கவுதமர், ஆகியவெண்மருடைய வழிகளேயேயாம். அன்னாருற்பவத்தினுண்மையை,

"ஊர்த்வநுப முகாஜாதா சாலிகச் சாலிகோத்ரகம்||
பூர்வநுப முகாஸ்ரஷ்டௌஹிரண்யோ ஜயமுநிஸ்ததா|| (13)
"தக்ஷிணே வதநஜாதா ஸ்த்யாஷா டௌசநஸ்ததா||
பச்சிமேவதநேஜாதௌ ஸாமாந்ய ஸ்தாபகஸ்ததா|| (14)
"உத்தராந்முகதோஜாதௌ காத்யாயநச கௌதம:||
ஏதே பஞ்சமுகாஜாதௌ தசப்ராஹ்மணஸ்ருஷ்டிதம்"|| (15) அதாவது, பிரமதேவருடைய ஊர்த்துவ முகத்தினின்றும் சாலிகவிருடியும், சாலிகோத்திர விருடியு முண்டானார்கள். பூருவமுகத்திலே நின்றும் இரணியவிருடியும், ஜயமுனியுமுண்டானார்கள். தெக்ஷிணமுகத்தினின்றும், சத்தியமகா முனியுஞ், சதனவிருடியு முண்டானார்கள். மேற்

$விச்சைகண்டோர் தருபழம்போன் மெய்யர் சடன்மீர்!மறை யுணர்வோ, டெச்சமொழித்தத்தியமுதல்விழ்ந் தியல்பொய் விடிற்றுனுஷ்வி ரென்றார் (௰௬)

சென்றாதுதேர் வுறமென்னுற் றேறவுமையுத் தனர்போனும், நன்றூர் தருபபோய் வப்மினென நல்குத்தரகொண் டேர்க்குவந் தார், குன்றுக் களிகூர்ந்தவனுறுநாள் கோதிலவருளொருவ ரிடை, பொன்று ரியசௌந்தரியவதி யொருத்திகன்னி யாயிருந் தாள். (௰௭)

அக்கன் னிகைசந்தமுமுணர்வு மண்டார் வருணித்திடக்கேட் டுச், சிக்குற்றிருளி லமைருமத் தேயத்தரயன்மணம்பேச, வொக் குங்கருத்தனைவுயிர்க்குயிராஞ் சிவனவ் வுஞற்றலஞ்சிப், பக்கச் சாலிகோத்திரர்ப்பார்ப் பான்விழ்வெழுப்பித் ததிசியுப்த்தான். (௰அ)

£ பிருகுபெயரன்றதீசிமுனி பிறங்கு சாலிகோத்திரரை, யரு ளின் வழியாப் பார்க்கவெண்ண மாய்த்தெய்வக்குன் றடைந்தன னல், வருகையறிந்தங் கண்மகிழ்ந்து வணங்கியெதிர்சென்றழை த்துவந்தே, பொருவி லோராசனத்திருத்திப் பூசித்தன்பாற்புகழ் ந்து நின்றார். (௰௯)

கு முகத்திலே நின்றும் சாமானிபவிருடியும், தாபகமுனியு முண்டானார் கள். உத்தர முகத்தினின்றும், காத்தியாயனவிருடியும், கௌதமமுனியு முண்டானார்கள். இந்தப்படி ஐந்து முகத்தினின்றும் பத்துப்பிராமணர் கள் பிரமாவினாலே சிருஷ்டிக்கப்பட்டார்கள். என்னும் விஷ்ணுபுராண வசனங்களால் நன்குணர்ந்துகொள்க.

$ விச்சை = தெரு.

£ பிருகுபெயரனுந்ததீசிமுனி = பிருகுமுனிவருடைய பௌத்திர னாகிய ததீசிமுனிவர். இவருற்பவத்தை விசாரிக்குமிடத்து—

"நவப்பிரமாக்களு ளொருவராகிய பிருகுமுனிவர் "கியாதியை" மணந்து இலக்குமி, தாதா, விதாதா, என்னுமூன்றுமக்களைப் பெற்ற னர். அம்மூவருளொருவராய 'தாதா' வென்பவர் 'தத்தியங்கிருடி' யென்னும் பெயராலும் பிரசித்தமாயினர். அத்தத்தியங்கிருடியானவர் மேருபுத்திரியாகிய 'ஆயதி'யை மணந்துபெற்றபுத்திரனே 'ததிசி' முனிவ

ஈண்டின்பாயந்தனர்க்காசி சமுறித்த ததசி முனிபேசிக், கொண்டங்கிருக்குங் காற்கொடுங்கோற் குபன்கோட்பட்டஞ் சாதவந்தே, மண்டுன்புறவந்தா *சாலிவணங்குஞ்சாலியக்கொழுந்தை,

---

ராவார். அத்ததீசிமுனிவர் மகாசவிவல்லபராதலின் அவருக்குப் பிராணனென்னும் மற்றொருபெயருமுண்டாயிருந்ததாகத் தெரியவருகிறது. அவர்தாமே அதர்வவேதத்தையுமாக்கிப் பூர்வகாலத்திலே எழுதாக்கிளவியாகவருளிச்செய்தனர் அந்த வேதநூலவர் சுருதிமுனியெனவும்படுவர். அவர் இச்சாலிகோத்திர மரபிலோர் சௌந்தர்யவதியை மணந்து 'பிப்பலாதமுனி'வனைப் பெற்றனர். அந்தப் பிப்பலாத முனிவருக்கு வேதமுனி புத்திரனென்றறிவுறுத்தவல்ல 'வேதசிசு' வென்னுமற்றொரு பெயருமுண்டாயிருந்தது என்றுகேட்கப்படுகிறது இவ்வளவே ஈண்டு நாமுணர்ந்துகொள்ளவேண்டியதோர் வரலாறாகும். இவ்வரலாற்றினுண்மையை,

“தமவாதத்தியங்ருஷி: புத்ரா ஈதே அதர்வண:
தத்தியங்தாதர்வண:” என்ற வேதவசனத்தால் தத்தியங்ருஷி புத்திரர் அதர்வணவேதங்கண்ட அதர்வண விருடியாவர். என்று தெரியவருதலாலும், பிரமபுராணத்திலே அர்தத்ததியங்ருஷி புத்திரர் ததீசிமுனி. அவர் புத்திரர் பைப்பலாதர் என்று கேட்கப்படுதலாலும், கூர்மபுராணத்திலே பிருகுமுனிவர். குமாரர்—தாதா; அவர்சுதர் பிராணன்; அவர் மைந்தர் வேதசிசுவென்று வலியுறுத்துவதாலும் நன்கு போதரல்காண்க.

இஃதொருபாலாகவும், ஸ்ரீசிவமஹாபுராணம் ஞானஸம்ஹிதை 44-வது அத்தியாயத்திலே கேட்கப்படு மொருகதையால் ஆதிசைவரில் ததீசிமுனிவ ரொருவரிருந்ததாகத் தெரியவருகிறது. அதுகொண்டு ததீசிமுனிவராதிசைவரென்றபிப்பிராயப்படுவாருஞ் சிலரிருக்கின்றனர். அவ்வாதிசைவத்ததீசிமுனிவர் சிவன்கோவிற் பூஜைசெய்துகொண்டிருந்த மற்றொருவரேயாவரென்பது அக்கதையை வாசிப்பவருக்கெல்லாமினிது விளங்குதல் திண்ணம். ஆதலின், இங்கே பேசப்பட்ட மகாசைவத் ததீசிமுனிவர்,

“பிருகுவின்மரபிற்றோன்றும் பிறங்குசீர்த்ததீசிமேலோன்” என்னுங் காஞ்சிப்புராணவாக்காலும், பிருகுமகாமுனிவரதுபெயரனே யென்பது சித்தாந்தமாதல்காண்க.

* சாலிவணங்குஞ் சாலியக்கொழுந்தை = அருந்ததியுந்தலைகவிழ்த்தக்க (பெண்மையிற் சிறந்த) சாலியரிளங்கிளையாகிய கன்னிகையை,

$விண்டைப் பிராந்தாக் கியமினுந்தாழ்விளக்கை £மணம்பேசின னம்மா (உ௰)

$ விண்டைப் பிராந்தாக்கியமினுந்தாழ்விளக்கை = திருமாலை வெறியனாகச் செய்தபிருந்தை (சலந்தராசுரன்மனைவி)யும் பணியத்தக்க (புத்தியிற் சிறந்த) தீபம்போலுங் கன்னிகையை. பிருந்தையினது புத்திசாலித்தனத்தை, அவள் கணவனையிழந்து துக்கமுறுங்காலத்திலே,

"வென்றி வேற்படைதுளைத்திட மெலிவுறுநேடியோன்
சென்றுபற்றினன் றிருந்திழை குறித்திது செப்பும்'
'மன்னுகேள்வனையிழந்துளேன் வைகன்மூன்றகன்ற
பின்னைநின்மனைக் கிழத்தியேயாகுவல் பெரும
வென்னவஞ்சித்து நீங்கினள் மனையகத்தெய்தி
வன்னிபுக்குயிர் விடுத்தனள் கற்பினில் வழாதாள்" என்றபடி திருமால் விரகமேலீட்டால் அவளைப்பிடிக்கவும், அவள் தன்னுளாலோசித்து எம்பெருமானே நான் நாயகனை யிழந்திருக்கிறேன்; ஆதலின் மூன்று தினங் கழிந்த பிற்பாடுனக்குமனைவியாகலாமென்று அத்திருமாலை வஞ்சித்து அரண்மனையினுள்ளேபோய் அக்கினிப்பிரவேசமாயினள். என்னுங்காஞ்சிப் புராணத்தால் நன்குணர்ந்துகொள்க. அத்தகைய கற்பிற்கரசியாகிய பிருந்தை யிறந்தாளென்பது வெளிப்பட்டவுடனே,

"எம்பலோ றுறையுமாய னித்திற முணர்ந்தானந்தச்
சாம்பரிற் புரண்டுபேய்க்கோட்பட்டவர் தம்மின் மாழ்கித்
தேம்பினன் அனையாள் செல்வத் திருவுருவுளத்திற்றீட்டி
யோம்பினனென்செய்வானங்குழிதந்தானெடுநாளிப்பால்" என்றபடி காமவெறிகொண்டிருக்குமந்த மாயவன் அவளிறந்த சாம்பரிற் புரண்டு அவளது அழகியமேனியைத் தியானித்துக்கொண்டு பேய்க்கோட்பட்டவன்போலக் கிடந்தானும். அஃதுணர்ந்திறைவனருளாலநுக்கிரகிக்கவே, அந்தச் சாம்பரில் துழசி. நெல்லி அகத்தி, என்னு மூன்று முண்டாயினவென்றும், அவற்றுள் துளசியையே பிருந்தையாகக்கண்டு புல்லியணிந்துகொண்டானென்றும், அந்தத்துழசி. நெல்லி. யகத்தி. மூன்றும்விஷ்ணுப்பிரீதிகர முள்ளனவாகத் துவாதசிதோறும் மங்கீகரிப்பவிருக்கு அம்மாதவனருளுண்டாகுமென்றும், அக்கதை முடிவுபெறுதலையு மிங்கே சூசிப்பித்தாம்.

£ மணம்பேசினனென்பது முதலியன:—

"தத்ஜ்ஞாத்வாது குபோராஜா கந்யார்த்த யாகத்ய சாதராத்||
கந்தாக்ஷதா திகம்தத்வா பூஜிதஸ்து யதாவிதி||

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
22 JUL 1914
MADRAS.

காய்நாராசம் போலவன்சொற் காதுட்புகுமக் கான்மகிழ்வாய், ஆய்நான் மறைதேரரச! புருடார்த்தமவாஞ்சன்மார்க்க! வற்ம்; ஏய்நா மறந்தங் தணர்சுதைதையை யிறைஞ்சிற் கருள்கென்றதுமென்னே?, தாய்நாடலைநாடிடிற்றீதுன் றனக்கா மிவர்பாற் கேடியென்றார். (உக)

பன்னாட்பழக்க முளததிசி பாலோமுனிவீர்! நன் றிவணீ, ரிந் நாளிருக்கக் கிடைத்ததென தெண்ணமிரிதாய்த் தெனவவர்க்கும், புன்னூர்ப் புண்டாய்த் திவனுநன்க புரிந்துகொண்டோ வந்தணிர்! பூ, †மன்னவார்க்குக் குடிமறையோர் வரராவாரோ? சொனமென்றான் (உஉ)

ராஜந்நாகத்ய கிங்கார்ய்யம் கர்த்தவ்யம் வதமேப்ரபோ||
கந்ந்யார்த்தம் ஆகதோ ப்ராஹ்மந் இதிராஜாஸம்ப்ரவீத்||" அதாவது, அஃதறிந்து குபராஜா கந்நியையின்பொருட்டு ஆசையோடுவர, சந்தனம் அக்ஷதை முதலியனகொடுத்து விதிப்படி பூசித்தவராகி, ராஜாவே! வந்தகாரியம் என்னே? (நாங்கள்) என்னசெய்யவேண்டும். பிரபுவே எங்களுக்குச்சொல்லும் (என). பிராமணரே! கந்நியையின் பொருட்டு வந்தேனென்று ராஜா சொன்னான். என்றும்,—
"ப்ராஹ்மணய மயாக்லிப்த கந்யாத்தோம்க்ஷத்ரியகலு||
நதாதவ்யாதுதேகந்ந்யாம் அவதத் முநிபுங்கவ:||" அதாவது கந்நிகை யென்னால் பிராமணன்பொருட்டு நியமிக்கப்பட்டிருக்கிறாள். நீ க்ஷத்திரியனல்லவோ? (எங்கள்) கன்னிகைஉனக்குக்கலியாணம் பண்ணிக்கொடுக்கத்தக்கவளல்லள். (என்று) முநிபுங்கவர் கூறினார் என்றும்,—

கூறும் பிரமாண்டபுராணவசனங்களாலு மறியக்கிடத்தல் காண்க.

† மன்னவார்க்குக் குடிமறையோர் வரராவாரோ? என்பது முதலியன:—

"பிருகுவின் மரபிற்றோன்றும் பிறங்குசீர்த் ததீசிமேலோன்
அருவிமாமதமா லியானைக்குபனெனு மரசன்றன்னே
டொருவருங் கேண்மையெய்தி யளவளாயுறையுங்காலை
யிருவருமொருநாட்கூடி நகுபொழுதினைய சொல்வார்"
"விப்பிரர் கொல்லோவன்றி வேந்தரோமிக்கப ரென்னு
மப்பொழுதந்த ணாளரரசரிற் சிறந்தோரென்னச்
செப்பினன் றதீசிமன்னன் மன்னரே சிறந்தோரென்றான்
இப்பரி சிருவருக்கு மெழுந்தது வயிரப்பூசல்"

வேந்தன் வினவுக்குளமகிழ்ந்த வேதமுனியோ விறைவ! பொறை
யேந்தற்கிலகு வாமறைபோர்ந் தியம்பு மறத்தாறியலு மன்னக்
காய்ந்தமறையோர் குரவரன்றோ? அவர்பூச்சியராலும்பரென்றார்.
மாந்தர்க் குய்வீந் தாளரையர் வலியரதுதேர்கிலிரோவென்றான்-
(௨௫)

இவ்வாறெதிர்பே சிருவருக்கு மிகன்மூண் டிடுமேப்போழ்துகுப்ன்
றெவ்வா யிடவுந்ததீசிமுனி சினந்தே யடித்துக் கொடிறுடைத்
தான், ஒவ்வா மறத்தாற் குலிசமெடுத் துரமன் முனிமெய் துணி
படுத்தான், அவ்வாப் வெள்ளி தனைநினைந்தே யலறிப் பிராணன்
கீழ்வீழ்ந்தான். (௨௬)

"அழலென முனிவன்சீறி யடித்தனன் அடித்தலோடு
மழலைவண்டிமிருந்தாரான் வச்சிரஞ் சுழற்றிவீசிப்
பழமறை முனிவனுக்கை யிருதுணிபடுப்பவன்றேன்
கிழமைகூர் வெள்ளிதன்னை நினைந்துகீழ் நிலத்துவீழ்ந்தான்"

என்ற காஞ்சிப்புராண வாயிலாகத் ததீசிமுனிவரும், குபமன்னனும், சிநேகமாயிருக்குங் காலத்திலே ஒருநாட் சம்பாஷணையிலே, பிராமணர் பெரியரோ? அல்லது க்ஷத்திரியர்பெரியரோ? என்றெழுந்ததருக்கத்திலே, கலாமுண்டாகித் ததீசிமுனிவர் குபமன்னனையடிக்கவும், அவன் இவரைத் துணிபடுத்தவும் நேர்ந்ததென்றும், அப்பாற் சுக்கிராச்சாரியர் வந்து அத் ததீசிமுனிவரை யெழுப்பிக் காஞ்சிபுரமான்மியத்தை யறிவுறுத்துஅங்குப் போய்த்தவஞ்செய்து, இறைவனைத்தெரிசித்து, இனியழியா வச்சிரயாக் கையைப்பெற்றுவரும்படிக்குக்கூறிமிருதசஞ்சீவினிமந்திரத்தையுமுபதே சித்தனுப்பினரென்றும், அவரவ்வாறேபோய்த் தவநோற்று,—

"அவ்வகை வரங்களெல்லா மண்ணல்பாற் பெற்றுமீண்டு
மெய்வகைத்ததீசியெய்தி வேத்தவை வேந்தன் சென்னி
யெவ்வமிலிடத்தாளோச்சியுதைத்தன னிவனுக்கென்று
தெவ்வெனச்சமரினேற்றமாயனைச் செயிர்த்துவென்றான்" என்

றமட்டிலுந்தான் கேட்கப்படுகிறது. இதனை விரித்துப்பேசவேண்டியதாண்டாவசியகமில்லையாகலின், அக்காஞ்சிப் புராண நூலாசிரிய ரம்மட்டிற் சுருக்கிவிளக்கினர்போலும். மற்றித்ததீசிகுபசம்பாஷணை சாலிகோத்திரமாரிஷிகளின் முன்னரேயே, காரணம்பற்றி நடந்ததாகவுள்ள விப்புராணச்சேள்வி மிகப்பொருத்தமேயா யிருத்தலறிக.

மேலுமகிழ்ந்தந்தனர்பார்போய் *வியனேர்மகட்குக் குலமிலை யால், மாவினமிசமாயிருபர்வழியெற்குமது மாட்டருதல், ஏது மெனவந்தணர்ததிசி யிறப்புமிவனின்றிடு நிலையுங், கோலுமனை னந்தரனடியுட் குனித்தேவாளாவிருந்தனரால் (உரு)

அஞ்சாதிட்டோய் §வலுவந்தத் தழைத்துக் கொடுபோ னுனணங்கை, நெஞ்சாறுததுயருறுபந் நேரத் தோடிப்பிருகுவந் தோ, மஞ்சா! வுனக்கு நிகழ்ந்ததென்னே? வருந்தேலென மெய் துவளிப்பொருத்தி, நஞ்சார் களன்றுணினைந் திணைக்கண்ணுட்டித் தடவி யெழுப்பிவிட்டார் (உசா)

எழுமாதவரோ பாட்ட! விச்சாலியர்பாலவனெஞ்சினிலோர்விட் டெழுதாலுந்தீராதகின முறுவாக்குரைத்தந்தணர்க்கு மன்னர் செழுமேலவரென்றெனதெதிருங் கிளர்ந்தானவன்கன்னத்தறைந் தேன், விழுமாறசனியோச்சவனை மிதித்துக்கொல்வானருள் கென்றூர் (உஎ)

---

* வியனேர்மகட்குக் குலமிலை = மிகவழகிய பெண்ணுக்குக்குலம் (பார்க்கவேண்டியது)ஆவசியகமில்லை: இஃதாரியவழக்காகும் போலும். அந்த வுண்மை, மகாபாரதியகாலத்திலே வித்தியார்த்திகளைப் பரீட்சிக்கு மரசசபையிலே கன்னனையருச்சுனன் பழித்தபோது திரியோதனனெ ழுந்து,

"கற்றவர்க்கும் நலனிறைந்த கன்னியர்க்கும் வண்மைகை
யுற்றவர்க்கும் வீரரென்றுயர்ந்தவர்க்கும் வாழ்வுடைக்
கொற்றவர்க்கு முண்மையான கோதில்ஞானசரிதராம்
நற்றவர்க்குஞ் சாதியொன்று நன்மைதீமையில்லையால்" என்று கூறிய தங்கே யங்கீகரிக்கப்பட்டதாற் போதரல்காண்க-

§ வலுவந்தத்தழைத்துக் கொடுபோனுனென்பது முதலியன:—
'ஏதத்வசநமாகர்ண்ய மஹாக்ரோத ஸமந்வித:||
பலாத்கந்ந்யாம் கிரீஹீத்வாது யுத்தம் சீருத்வாத்விஜோத்தமாத்||
புநர்யாதோ துபோராஜா சாலிகோத்ரா லயாத்புரீட்||
முநீச்வரோபிஹித்வாதம் தேவகிர்யாச்ரமட்த்யஜேத்||" அதாவது அந்த வசனத்தைக் கேட்டு மிகவுங் கோபத்தோடு கூடினவனுகி பிராம ண சிரேஷ்டரிடத்திலிருந்து போராடிஅந்தக்கன்னிகையைப் பலாத்கார

வெள்ளிமகிழ்ந்தோ தநீசியிங்கமேவந்தோ Ψசூரனிகர்த்ததவன்
புள்ளிமயில்வேலவர்ப்பயந்த புநித னருள்பெற் றதுபுரிக்கு
எள்ளலிலாநீ காஞ்சிநகர்க்கேகி யிட்டசித்தீச
வள்ளலடிதாழ்ந்தினிபிறவாவயிரமெய்முற்பெறுதியென்றே (௨அ)

மிருகசஞ்சீ வினிமனுவை வெள்ளி போதித் தனுப்பினனால், சுருதிமுனிவீழ்ந்ததுவும்வெள்ளி தரித்த தெழுப்பியுய்த்ததுவும் கருதியிவரேகதியெனச்செவ்வுள் சருத்தராய்த்தாழ்ந் தெமக்கு மின்பந் தருதிரென வேண்டினர்துதிசெய் தனர்சாலியவந்தணர் மாதோ (௨௯)

£சாலியதுகண் டருள்கனிந்தோ தருமதேவன் றௌத்திரர், மாண், சாலினுயஞ்சாலியத்தகவீர்! கவல்கிலீருங்குலத்துதித்த, ℞நாலி யழியாப்புகழ்வளர்த்தாணைப்பனருளாற் றதீசியையும், பாலி னுய்த்தாண்டனனில்லையற்பதிதன் செயல்கண்டெதிர்த்திறப்பீர் (௩௰)

இனியிப்பதகனுறைக்கீழ்நக்கோணதந்தணர்களேல்லாம்
நனியின்பாகிப் புறம்போய்ச்சின் னாளக்கிருந்தீங் கிவன்றொழுநாளே
முனிவிர்! வருதிர் வாழ்திரென்று மொழிந்தார் சென்றார் வினவறவோர்
துனிவிட்டுவந்து தம்மிலங்கள் தொழார்வைகாதே சுட்டகன்றார் (௩௧)
நேர்ச்சியொடுவாழ் § பழம்பதியை நீங்கந்தணநச் சினகிரிபோய்த்
தேர்ச்சியுளார்வேண்டுதப்தீணங்கித் திகழாண்டிருந்தார் சிவனருளே

மாகக் கைக்கொண்டு குபோராஜாவானவன் திரும்பி சாலிகோத்திர ராச்சிரமத்திலிருந்தும் பட்டணத்தை யடைந்தான். முனீச்வரரும் அந்தத் தேவகிரியாச்சிரமத்தைவிட்டு நீங்கினார்கள். என்னும் பிராணவசனத்தாலு முணரக்கிடத்தலறிக.

Ψ சூரனிகர்த்ததவன் = சூரபன்மாவை யொத்ததவ சிரேஷ்டன்.

£ சாலி = மிக்கோன். (பிருகுமுனிவர்)

℞ நாலி = முத்துப்போலுஞ் சவுந்தரியவதி.

§ பழம்பதி = தேவகிரி. அம்மஹாதேவகிரியை அடித்தானமாகக் கொண்டு மேற்குநோக்கிப் புறப்பட்டுப்போய்ச் சூரத்திற் சங்கமமாகிற தபதிநதத்திற்குத் தெற்கேயுள்ளது மகாராஷ்டிரதேசம் (பூனா ப்பக்கம்.)

இஃது "காராடஞ்ச விராடஞ்ச மராடங்கோங்கணந்ததா|| ஹவ்யகம் தௌளவஞ்சைவ கோளஞ்சேதிஸப்தகம்||" என்ற ஸ்லோகத்தாற் சேட்கப்படும் கிராதராஜ்யம், விராடதேசம், மஹாராஷ்டிரம்,

யார்ச்சித்திடுமோ தவரவராங்கடிவைத்திடவூர் செழிப்பமறை •
யோர்ச்சிக்குழாங்கோண்டோகாறு முவப்பார் சைவ நெறிவளர்ப்பார். (௩௨)

ஆசற்றுறைநாளவர்ப்பார்க்க வவாங் *கா சிபரத் திரிபாத்து
வாசர் விசுவாமித்திரர்கோதமர்மாண் சமதக்கினிவசிட்டர்
நேசங்கோடுவந் தனரிவர்மாநிதிகண்டெடுத்தாற் போன்றுமகிழ்ந்
தீசற்கியற்று தலிற்றவிசிட்டேத்திப் பணிந்தாரவருவந்தார். (௩௩)

கொங்கணம், ஹேபிகா, துளு, மலையாளம், என்னுஞ் சத்தகொங்கண நாடுகளிலொன்ருகிய மராடதேசமேயாம். இந்த மராடதேசத்திலே மஹாதேவகிரிப் பட்டினத்தினின்றும், வடக்குமுகமாகப் புறப்பட்டு மீர்சாப்பூருமலையையும், நருமதாநதியையும், விந்திய பருவத்தையுங் கடந்துபோய்,

வடக்கு ஆசுமீரமும், ஆக்கராவும்,— கிழக்கு அலகாபாத்தும், கந்த வனநாடும், —தெற்குக் காந்தீசமும், பீராரும்,—மேற்கு ஆசுமீரமும், குஜராத்தும்,—எல்லைகளாகவுடைய மாளவதேசத்தின் றலைநகரமாகிய உஜ்ஜனிப்பட்டினத்தை யடைந்தார்களென்று தெரியவருகிறது.

* காசிபராதியசத்தருஷிகளுள்ளே,—நவப்பிரமாக்களு ளொருவராய மரீசிமகாரிஷியின் மைந்தராகிய காசிபரும்,— நவப்பிரமாக்களு ளொருவராகிய அத்திரிமுனிவரும்,—மற்றொரு அங்கிராவென்பவருக்குப் பௌத்திரன்பிள்ளையாகிய பரத்துவாஜரும்,—நவப்பிரமாக்களு ளொருவரேயாய வசிட்டரும், ஆக நால்வரும்போக வேனையமூவரும் விசாரணையினுலேதான் அக்காலத்தவரென்று நிரூபிக்கவேண்டியவர்களா யிருக்கிருர்கள். ஆதலின் விசாரிப்பாம்.

ஈண்டுக்கூறிய, விசுவாமித்திரராவார்:— காசிபருடைய பிள்ளையாகியஉபேந்திரனென்றுகேட்கப்படுகிருர். அவ்வுண்மையை, வேதாரணியபுராணம் பிரமாதி சிருஷ்டிச் சருக்கத்தில் (32),

"அடுக்கியபழ வுலகினுக்கு மநக்கருக்கு மிந்திரனை யரசனுக்கி நடுக்கமறத் தோடுங்கவசம் வச்சிரத்தோடளித்தியிடை நயந்துதோன்றிப், படுக்கையுறங் குசைசூழ்ந்து கௌசிகனென் றோர்பெயரும் படைத்தமாலை, யிடுக்கணுறும் படைத்துணையா மிளையோனென்றுற முடிவைத்தியற்றினனே" என்ற கவியிற்பிறக்கும்பொழுது குசத்தாற் சூழப்பட்டுப்பிறந்த ஏதுவால் உபேந்திரனுக்குக் கௌசிகனென்றொரு பெயருண்டாயிருந்ததாகக் கேட்கப்படுகிறதாலும்,— அவ்வுபேந்திரன்

தன்னுடன்பிறப்பாகிய விந்திரனுக்காகப் புண்ணியவானனமாவலியை வஞ்சித்துத் தொலைத்ததுவால் (விசுவ+அமித்திரன்) உலகவிரோதி யென்னும்பொருடரும் விசுவாமித்திர னெனப்பட்டனரென்னு மொரு கேள்வியாலும் நன்குணர்வார் பெரியோர். அன்றியும் விசுவாமித்திர ரென்னும் பெயருபசாரமாக உலகபாசனன் என்னும்பொருளில் வழங்கி வருதலுமுண்டு. அங்ஙனம் பிரசித்தனான இக்கோசிகன் [உபேந்திரன்) மாவலியை யொழித்தபின்பு இந்திரனுக்கு எதிரியில்லையாதலின் இருடிகளுடன்கூடி இந்திரனுக்காகச் செய்யப்படும்வேள்விகளைச்சரியாக நடைபெறுவிக்கவேண்டி வேள்விச்சாலைகடோறும் அத்துவரியுவோடுகூட விருந்துமேற்பார்க்கும் பிராகாதிபத்தியத்துவமு முடையவனாயிருந்தனன். இவ்வாறு அத்துவரியு, ஓதா, உற்காதா, என்னுமியாகப் பிரதானிகளை மேற்பார்ப்பவனும், படைத்துணையாயுமிருந்த விசுவாமித்திரன் (உபேந்திரன்) சப்தருஷிகளுளொருவனுமானனென்று கேட்கப்படுமொரு கதையாலும் நன்குணரக்கிடத்தலுங் காண்க. அப்பால்,

b கௌதமராவார்: அகத்தியனாரொடு முருகக்கடவுளிடத்தில் தமிழ்கேட்ட கௌதமனாரென்று கேட்கப்படுகிறார். இவர்மூன்று கூட்டஞ் சப்தருஷிகளுள் வைத்தெண்ணப்பட்டனர். இவர்போலுமிவரொடுடங்கேட்ட மார்க்கண்டேயனார் மற்றொரு கூட்டமாய சப்தருஷிகளுள் வைத்தெண்ணப்படுகிறார். அந்த மார்க்கண்டேயனார் கூடிய சப்தருஷிகளுள்ளே அகத்தியனாரொருவருங் கேட்கப்படுகிறார். அவ்வகத்தியனார். சங்கமிருந்து தமிழ்வளர்த்தாரில ரென்பதை, இதற்கு முந்திய 26-வது படலத்தில்62-வது கவியின் கீழ்க்குறிப்பிற் சூசிப்பித்தாம். பின்னை அவர்தாம் யாவரெனின், நவப்பிரமாக்களுளொருவராய புலஸ்தியர் பிரீதியைமணந்து தத்தாத்திரி(தர்த்தோக்கினி) முனிவரைப்பெற்றாரென்பது அறிஞரறிந்ததொரு விஷயமாம்- அத்தத்தாத்திரிமுனிவர்பூர்வஜன் பத்தி லகத்தியராயிருந்தவ ரென்னுமுண்மையை விஷ்ணுபுராணமும், தமிழ் வாயு சங்கிதையும், நன்கறிவுறுத்துதலாலே அவருக்குப் பூர்வஜன் மநாமத்தா லகத்தியரென்று மற்றொரு பெயருமுண்டாயிருந்ததென்பார் பெரியோர்- இதனாலே அகத்தியர் முந்தியசரீரத்தினீங்கி மற்றொருபிறப்பையுமடைந்திருக்கிறாரென்பதை யூகித்துணரு மொவ்வொரு புத்திமான்களும் அகத்தியனாராச்சிரமபரம்பரையிற் பலராயிருந்திருக்கிறாரென்றியர் ஞராய்ந்து நிரீஇயவுண்மையை உண்மையாகக் கொள்ளுவரென்பதுந் திண்மையாம்- இதுவரை இரண்டுகூட்டஞ் சப்தருஷிகளெடுத்துக் காட்

டப்பட்டிருக்கின்றனர். இவர்களெல்லாரும் பிராசீன ஆரியவிருடிகளே யாவர்- இங்கே கௌதமனரை விளக்கிக்காட்டினும்- இனி,

c சமதக்கினியாவார்:—நவப்பிரமாக்களு ளொருவராய பிருகு முனிவருக்கு கியாதியையடுத்த மற்றொரு மனைவிவயிற்றிற்பிறந்த புத்திர ரென்று கேட்கப்படுகிறார். இவரது புத்திரரே திரணதூமாக்கினி முனி வராவார். (தொல்காப்பியர்) இவ்வளவில் இங்கே நிரூபிக்கவேண்டிய மூவரையு முறையே யாராய்ந்து நிரூபித்தவாறறிக-

இங்ஙனமிருக்கவும், இவர்காலத்திற்குச் சற்றேறக்குறைய 3000 வருடங்கட்குப் பிந்திய இராமாயணகாலத்திலும் சமதக்கினி, விசுவாமித் திரன், என்னுமிருவருண்டாயிருந்தனரென்பது மூலகப்பிரசித்தமாம். அவர்கள்வரலாற்றை விசாரிக்குமிடத்து,—

1 புரூரவன், 2-அமாவசு, 3-பீமன், 4-காஞ்சனன், 5-சுகோத்திரன், 6-சன்னு, 7-சுமந்து, 8-அசகன், 9-பலாகாசுவன், 10-குசன், 11-குசாம் பன், 12-காதி, என்றொருவர்பிள்ளையொருவராக முறையேதோன்றி, புரூரவன் றொடங்கிப் 12-வது தலைமுறைப்பிள்ளையே காதிமகாராஜா வென்று கேட்கப்படுகிறார்- இந்தக் காதிமகாராஜாவுக்குச் சத்தியவதி யென்னுமொரு புத்திரியிருந்தனள்- இச்சத்தியவதியைத் தாரித்திராரி யர் மரபிலே பிருகுவென்னு மொருவருடைய புத்திரராகிய ரிஷீகமுனி வருக்கு மணம்பேசினர். அந்தரிஷீகமுனிவரோ மிகக்கிழவர்- அதினும் பிராமணர். அவருக்குப் பெண்கொடுக்கக் காதிமகாராஜாவுக்குச் சம்ம தமில்லை. ஆதலின், அவர் ரிஷீகமுனிவரைநோக்கி ஓ ஐயரே! உமக்குப் பெண்வேண்டுமாயின் ஒரு காதுமாத்திரங் கறுத்தும், மற்றைய அவயவ முழுவதும் வெளுத்துமுள்ளவைகளாய் மிகவேகமுள்ளவைகளா யிருக் கும் 1000-குதிரைகளைக் கன்னியா சுல்க்கமா (கன்னிகையைக் குறித்துத் தரும்பொருளா) கத்தரவேண்டுமென்று கேட்டனர்- அவர் அப்படியே தருவதாக ஒப்புக்கொண்டுபோய் அசுவதீர்த்தத்திற் பிறந்தனவாய், ஒரு காதுகறுத்த வெள்ளைக்குதிரைகளாய் ஆயிரங்குதிரைகளை வருணனிடத் தில் (மேலைத்வீபகற்பமாகிற அரேபியா தேசாதிபதியின்பால்) வேண்டிக் கொணர்ந்து கொடுத்து அக்கன்னிகையை மணந்து கொண்டனர். இங் கே அராபிய தேசாதிபனுக்கு அவ்வராபியா வாருணத்வீபகற்பமாதலின் அதனையுடையானென்னுங் காரணக்குறியாக, வாருணனென்றொரு பெய ரு முண்டாயிருந்ததென்பதுஞ் சூசிப்பிக்கப்பட்டது. அந்தவுண்மை வாருணிவல்லபன் = வருணன் எனவழங்குமொருவழக்கா னன்குபோதா

லறிக. அத்தேசம்வரானி (பாலை) மிகுத்ததாதலின், அங்கே நீர்வளமுள்ள மீக்கத்தைத் தலைநகராகக் கொண்டிருந்து, ஒவ்வொரு நீர்வளமுள்ள விடங்களிலிருந்து மற்றைய நீர்வளமில்லாத விடங்களுக்குத் தண்ணீரை யுய்க்குமாறுய்த்துப் பாதுகாத்தலினாலேயோ, அல்லது அரேபியா கடலுக்கு தலைவனாயிருத்தலினாலேயோ சலபதியென்றொரு பெயருமத்தேசாதிபனுக்கு உண்டாயிருந்ததென்றுந் தெரியவருகிறது. அவனுடைய சகாயத்தினாலே காதிராஜாவின் புத்திரியை மணந்துகொண்டரிஷீகமுனிவர் தாமிகக்கிழவரானபடியால் புத்திரோற்பத்திசெய்யுந் தத்துவமில்லாதவராயினும், மகாதவசிரேஷ்டராகிய அவர் புத்திரோற்பத்தி செய்வான்றுணிந்து ஒரு சருவை (ஒருவகைக்சோற்றை)ச் செய்தார். அது கண்ட அவருடைய பத்தினி (சத்தியவதி)யானவள் தன் நாயகன்பால் தன் தாயாருக்கு ஆண்மகவின்மையினாலே தனக்கொரு சகோதரனுண்டாகும்பொருட்டுமொருசருவைச்செய்துதரும்படி கேட்டுக்கொண்டாள். அவ்வாறே, மற்றொரு சருவுஞ்செய்து கொடுத்தனர். அவற்றை முறையே மனைவியையும், மாமியையு முண்ணும்படி ஆஞ்ஞைசெய்துவிட்டு ரிஷீகமுனிவர் வனத்துக்குப்போய்விட்டார்.

சத்தியவதி கொண்டுபோய் ஒன்றைத் தாய்கையிற் கொடுத்து, மற்றொன்றைத்தான் புசிக்கத் தொடங்குகையில் தாய்மகளைநோக்கி அடி அம்மா! உன்புருஷன் உனக்கென்று கொடுத்ததில் ஏதேனும் விசேஷமிருக்கும்; ஆதலின் அதையெனக்குக்கொடு; எனக்கென்று கொடுத்ததை நீபுசி; என்று வேண்டிக்கொண்டனள். தாய்வார்த்தை தட்டமாட்டாமலிணங்குதலால் அவ்வாறே மாற்றிப்புசிக்கநேர்ந்தது. இருவருங்கருப்பமாயினர். வனத்துக்குப்போன ரிஷீகமுனிவருஞ் சின்னாட்கழித்து வந்து சேர்ந்தனர். அவர் கருப்பமாயிருந்த மனைவியைநோக்கி இராஜதேஜஜோடு கூடியபிள்ளை அவள் கருப்பத்தில் வளர்வதைத் தெரிந்து வருந்தினர். அப்பாலந்தச் சத்தியவதிவயிற்றிற் சமதக்கினி பிறந்தார் காதி மகாராஜாவின் பத்தினி வயிற்றில் விசுவாமித்திரர் பிறந்தனர். அந்தச் சமதக்கினிமுனிவர் இக்ஷுவாகுவம்சத்தனான ரேணுமகாராஜாவின் புத்திரியாகிய ரேணுகையென்பவளை மணந்து பரசுராமரைப்பெற்றார். விசுவாமித்திரர் தேவர்களாலே கொடுக்கப்பட்ட வரத்தாற்கிடைத்த தேவராதனெனப்படும் சுனபச்சேபனைப் புத்திரனாகப்பெற்றார்- அவனுமன்றி மதுக்சந்தன், தனஞ்சயன், கிருததேவன், அஷ்டகன், கச்சபன், ஹாரிரன், என்னும் வேறு ஆறுபுத்திரர்களையு முடையவராயிருந்தனர். என்று கேட்கப்படும் விஷ்ணுபுராண சரித்திரத்தால் ரிஷீகமுனிவர் புத்திரரே சமதக்கினி யென்றும், காதிமகாராஜாவின் புத்திரரே விசுவாமித்திர

ஐயன்மீர்! நும் போலுலகி லறவோரியாங்கண் டிலமமக்காப்
பெய்யு மழைகோன்ன டியும்புவனம் பிறங்கத்தகவாநுமதுளமும்
நையும்படிகோள் புரியுமோன்னுர் நலிவர் நீவிர் சிவன்கழற்கே
செய்யுமன்பார் வழிபாட்டாற் றிருவார்ந் தோளிகூர்ந் தீவர்விரேன்
றர். (௩௪)

வாழ்த்தித் திருத்த யாத்திரைக்கா வருமத்தவர்போயினரப்பாற்
*றழ்த்த சடையோ னிவர்புரிபூ சனைகண்டிரங்கிக் காட்சிதந்து
பாழ்த்த சாபங்கழிவித்துப் பரமகருணை நிதியளித்துச்
சூழ்த்த குடும்ப வரசிவர்வான் றுணைக்கணருளி மறைந்தனனுல் (௩௫)

அப்பாற் சுகவாழ் வுடனுலகுக் காமான்ங்காத் தற்றேழில்செய்
தேப்பாரகமும் போற்றவவணிருந்தார் சிலநாட் பினர்த் §ததிசி

ரென்றும், நன்கு விளங்குகிறது- இங்கே கேட்கப்படும் விசுவாமித்திரர் குசனுக்குப் பௌத்திரன் பிள்ளையாதலின் குசன்மரபிற் பிறந்தஹேது வாற் கோசிகர் என்னுமற்றொருபெயருமுடையவராயினர்- இவர் கொலைவேள்விப் பிரியராதலினுலும், இவர் செய்யும் வேள்வியைத்தடை செய்ததாடகையாய வுத்தமசீலையை அநியாயமாகக் கொல்வித்தாராதலி னுலும் உலக விரோதியென் றழைக்கப்படலின் விசுவாமித்திரரெனவும் பட்டார் ஈண்டுக்கூறப்பட்ட சமதக்கினிபுத்திரர் பரசுராமரொருவர்மாத் திரமே யுள்ளாராதலின் அவருடன் திரணதூமாக்கினியும் பிறந்தாரென் பவர் கூற்றுஆராய்ச்சியுடையாருக்கு அநங்கீகாரமாதலு மிங்கே கவனிக் கத்தக்கதாம்- இவ்வளவில் சப்தருஷிகளுள் வைத்தெண்ணப்படும் சம தக்கினியும் விசுவாமித்திரரும், இராமாயணகாலத்துச் சமதக்கினி, விசுவாமித்திரர் இலரென்பது நன்குவிளக்கப்பட்டதுணர்க-

* தாழ்த்தசடையோ னிவர்புரிபூசனைகண்டிரங்கிக் காட்சிதந்தென் றதை:—'தத்காலேது ஸமாகத்ய மஹாதேவக்ருபாநிதி|| விலோகயந் முநிம்க்ஷேமம் பபாஷேக்ருபயா ஸஹா|| ஸர்வசாப விநிர்ம்முக்தா ஸர் வைச்வர்யம்பஜஸ்வச|| இதிதத்வாவரம்தேவோபுநரந்தர்ததேசஸ:|' அதாவது, கிருபாநிதியாகிய மகாதேவர் அந்தக் காலத்திலே வந்து முநி வரைப்பார்த்து கிருபையோடுகூட க்ஷேமத்தைச் சொன்னர். (எப்படி யென்றால்) சர்வசாபங்களினின்றும் விடுபட்டவராகி சருவஜசுவரியங் களையும் அடைவீராக. என்றுவரங்கொடுத்துப் பரமேசுவரர் திரும்பவும் மறைந்தருளினர். (என்பதாம்) என்னும் புராணவசனத்தாலுமறிக.

§ ததிசி என்னு மெழுவாயொருமையேயாகவும், தூரத்தினரெனப்பன்

யேரப்பார் மிக்கா ரிலானருள்பெற் றேழியா வயிராபாக்கையராய்
வெப்பாவந்து துபன்றலேயின் மிதித்து வீழ்த்தித் துரத்தினரால் (கசு)

அஞ்சியோட்டம் பிடித்ததுப னரிபாற்சரண்புக்கிடவரியவ்
வஞ்சன்றனக்கு மஞ்சலேன்றன் வந்து ததிசிபானுட்டைக் [தான்
கெஞ்சிக்கேட்டும் விடலனென்றார் கேறுவங்கோடுமால் போர்தோடுத்
பிஞ்சுமதிசூ டிறைமலர்த்தாள் பேணுமுனிவரேதிர்த்தனரால் (கஎ)

மாலேவுகளை வயிரமேய்தான் வாங்கா தோடித்துத்தூளாக்க, லாலே சினந்தாழியையுய்த்தானதுவும்வேள்கியடிபணியக், காலே றினர்முன்மாலோடுமேற் கட்டி கீமல்லாப்புறவீழ்த்தி, மேலேயிருந்து துத்துகையின் வேண்டும்யோற்கா விட்டுவேந்தார் (கஅ)

அப்பாலரியுந்துபன்மகிழ்வானஞ்சேலிம்மாதவனேடெதிர்ப்
போப்பாதினி *வஞ்சித்திவனை யோழிப்பதோக்து மதுபுரிவேன்
றப்பா தவனீ போகலேயேன் சார்பிற்றவனுய் வாழ்தியேன்றே
வைப்பானுயுள் வயிரழற்று மாலூர்க்கேகி வளர்துநனல் (கசு)

மையிற் பயனிலே முடியலாமோ? எனின், ஈண்டுக்கர்த்தா வொருவனுத லினெருமையின் வைத்தும், அவன் கருமமுடித்ததிறனுற் புகழவேண்டியுபசாரப்பன்மையாகக் கூறுதல் தோடமில்லையென்க. ஈண்டுக் காணப்படு மொவ்வோரிடங்களிலும் ஒருமை பன்மை மயக்கென்னு மான்றேர் வழக்கா விலக்கணமுண்மையுங் கண்டுணர்ந்துகொள்க.

கீமல்லாப் புறவீழ்த்தி = உட்புறம் மேலாய்க் கிடக்கத்தள்ளி. இவ்வாறு ததீசிமுனிவர் திருமாலுடன் போர்புரிவைபவத்தை:—

'தேரரி யிறையன்றேன்றே சிவமுனிததீசினேடே
போர்புரிந்திகலுமாலேப் புக்கவன் பிடித்தடித்து
மார்பினிலுதைத்து மாறன் சக்கரம் வயிற்றில்வைத்திட்
டேர்மலி படைபடைத்திட் டரிபடவேறிந்தானன்றே" என்று சிவஞானசித்தியார் போதத்தாலும்,

"தேவ்வேனச்சமரினேற்ற மாயனைச் சேயிர்த்துவென்றன்" என்னுங் காஞ்சிப்புராண போதத்தாலும், நன்குணர்ந்துகொள்க.

* வஞ்சித்திவனை யொழிப்பதொக்கு மதுபுரிவேன்றப்பாது = என்றபடி, கபடமார்க்கமாகத் ததீசிமுனிவரைத் திருமால் கொன்றுபோட்டாரென்பது முலகப்பிரசித்தமாம். அதாவது,

தூபனையுநைந்துத் துராத்தியரி கோட்டமடக்கித் தேவகிரிக்
கபயமாக்கி மயனையங்கே யழைத்துமுன் போற்பதிபுதுக்கிச்
சுபவெற்பார்த்தந் தணர்க்கோணர்ந்து சுகமாவாழ்திரேன விருத்தித்
தபமேய் யவரின்பாயாசி தந்தற்புதனை யனுப்பியப்பால் (௬௮)

ததிசிமுனிவர் சாலிகமாதவர்ப்பார்த்தேம்மானநுஞேக்காற்
றிதிகோளுமைநட்டியாளிறவாத்தேகம் படைத்தேனுமைப்பகைத்த
பதிதனுனைபட்டோழிந்தனனப்பதகற்கிட நல்கரியையுநான்
றுதிபெற்றிடவேன்றனனிதனுற் றுணிந்தே னெல்லோரிணக்கமேன்றார்.

சைவாச்சார சாலிகரோ ததிசிமோலோய்! நீரேமக்கா
மெய்வாக்களிப்ப வதுசகியா வேறியன்றுணிப்ப விழுமையா

"துவஷ்டாபுத்திரன் விச்சுவவுருவனை இந்திரபுரத்திற்குக் குருவாகக்கொள்ளும்படி பிரமதேவர் குடிலபோதஞ்செய்தார். அம்மலர்மகன் சூழ்ச்சியைத்தேராமல் அவரது கபடபோதத்தை மெய்யென்றுநம்பிய விந்திரனுமவ்வாறேகொண்டான். அங்ஙனங்கொள்ளப்பட்ட விச்சுவ்வுருவன் அந்தக்கீழ்நாட்டிலே இந்திரனதேவலாற்றொடங்கியதோரியாகத்திலே மனத்தில் ஒன்றுகொண்டு வாக்கிலொன்று விண்டானெனப் பிறர்தூண்டதலாற் கொல்லப்பட்டான். அந்த ஹேதுவாலவ் விச்சுவவுருவனுக்குத் தந்தையாகிய துவஷ்டாவென்பவன் வருத்தமேலிட்டவனாகி ஈசுவரனிடத்தின் முறையிட்டான். அவன் வேண்டுதற்கிரங்கிய ஏழைபங்களுகிய இறைவனுணையினுலே இந்திரபுரத்திலே விருத்திர கோட்டாலை யொன்றுண்டாயிற்று. அது சகிக்கலாற்றுதே பிரமதேவரிடத்தில் தேவராஜன்வந்து முறையிட்டான். அத்தேவேந்திர பிரார்த்தனைக்கு விடையிறுக்கவழிதோன்றுத பிரமதேவர் இந்திரனையுமழைத்துக் கொண்டுபோய்த் திருமால் திருமுன்னரடைந்துவிண்ணப்பித்தனர். அவரிஃதொரு நல்லசமயமென்றுகருதி இந்திரனைநோக்கித் ததீசிமுனிவரிடத்து முதுகந்தண்டையாசித்துப் பெறும்படிகூறியுய்த்தனர். அவ்வாறே போய்வேண்டவும் அவர் கொடையாற் சிவலோகமடைந்தாரென்னுமொருகதைக்கேள்வியேயாம். இதனுலே இடையில் விச்சுவவுருவனுக்கும் பிரமதேவருக்கும் நடந்ததொரு வாதத்திலே பிரமதேவர் வெல்லப்பட்டார். அந்த ஹேதுவாக உள்ள அவரதுட்புழுக்கந்தீரும்படி அவரேவிச்சுவஉருவனைக் கொல்வித்தாரென்பதும் சூசிப்பிக்கப்பட்டது. இக்கதை திருவிளையாடற்புராணத்திலும், வேறுசில நூற்களிலும், நன்கு விளக்கப்பட்டிருத்தலாலே யுண்மையுணர்ந்து கொள்க.

முய்வானெழுப்பி யயிரமெய்தந்தூணை னெழித்துட் குறுத்தரியை
மைவாழ்பொழிலூர்புதுக்கி யெம்மைவைத்த சிவன்மேறிலையென்றார்

பின்னுமுரைப்பார் தவேச! வெமைப்பேணும் பெரியோய்!
எமக்குவந்த, வின்னலொழிதற் குபாயமுண்டே லியம்புமெனவ்
தென்னை? யெனச், சின்னத் தனத்தூண்ணுமைந்துகுபன்சிறு
மிதனைக்கொண்டேகினளைக், கன்னி கதியென்? உணர்த்துமென்
று கண்ணீர்ததும்ப வேண்டிநின்றார் (௬௩)

எனைவிழ்த்தியபி னிதுவுமொன்றீண்டியன்றதோ? நன்
றென்றுசற்றே, முனிவனகக்கண் மலர்த்திவிழிமூடியுணர்ந்தா
னந்தணர்காள்!, பொனைநேரவளைக் குபன்பிடிக்கப் போங்கான்
மகிழ்வாவிறைவ! வரண், மனைபோய்ச்சிலசொல்லுனனென
முன்வந்தா ளவன்பி னவன்வந்தான் (௬௪)

போனாரரச மாளிகைக்குட் பூவைகனிவாய்மலர்ந்து மன்ன!,
எனத்திரம்? நான்நின்காப்பி லிருக்கின்றேனெற் கொருவிரதம்,
தானாற்றியபின் மணந்தகுமாறனித்தோர் மாடம் வனத்தாக்கி,
யானுமவனைவைத் தருண்மூவாண்டப்பாற் பிறிதாகட்டுமென்
றாள் (௬௫)

அவ்வாறிருத்த விருக்கின்றாளம்மை யகிலாண்டேச்சொரி
யைச், செவ்வாய் மலர்ந்து துதித்துள்ளிற்றிருந்த விருத்திக் கை
குவித்தே, யிவ்வாபத்திற் படுத்தாதேயெனையாள்கெனவுந்தின
ம்வேண்டி, யுவ்வாதரித்தாளவடவங்கண்டுவந்தாண் டிறைபா
லுமைவேண்ட (௬௬)

உமைபோர் பாகனுடனெனையீண்டுய்த்தானென்னு ளுணர்
வெழுப்பி, யமைவேண்டிடிற்றான் பொறுப்பானோ? வருளே வடி
வாமவன்செயலாற், கமையீர்! இவண்பின்னடந்தவெல்லாங் கண்
டரிவியக்கன்னிகைதா, னிமையாவிழித்தே வருங்காணு விடத்தி
லிருக்கின்றாளென்றார் (௬௭)

பரிவுதலைக்கொண்டந்தணரோ பரமெய்த்தவத்தீர்! அவட்
காணப், புரிவுகூர்ந்த தவ்விடைநாம் போவோமெனக்கூட்டினர்

போனார், பிரியமுடனந்தணிர்மாரும் பின்னர்த் தொடர்ந்தீர்
போப்க்கண்டார், கிரிசையருள்பெற் றுறைமினின்பக் கிளர்வோ
டிறைஞ்சித்துதித்தன்பால் [சஅ]

ஐயன்மீர்! நமமுயர்குடிக்குளடியேன் மகளாய்ப்பிறப்ப வெ
ன்னை, மெய்யர் திருவாசரின்வாய்மை விதிக்கச் சுறுநுங்கவ
தீர்ப்பான், செய்யுந்தவத்திற் கிவண்போக்குஞ் சிவையேயுங்கடி
ருமுனஞ்சாக், கையனாவே றினனையெற்றங் கழலென்றுணையாக்
கினனென்றாள் (சகூ)

உண்மைவினாய ததீசிமுனி யோகோ நானே கிருதார்த்தன்,
பெண்மையணங்கையுமைத்தாயே பெட்புற்றருளிற் பெறுவன
தே, திண்மைநலமெனன்றுவகைதலை சிறந்தாரதுகண்டறவரெ
லா, மெண்மைதீர்ந்தார் களிகூர்ந்தா ரிறைவியருட்பாங்குளதோ
ர்ந்தார் (ருய)

மீகளை மகட்குவரனாக மகிழ்ந்த மாதவோத்தமனைத், திகழு
மன்போட்டைத்தகம்போய்த் திருமணஞ்செய்வித்தனரால்,
புகழுமம்பிராண்ட தீசிமுனி புகல்சௌந்தரியவதிவயிற்றிற், பக
ருவேதசிசுவெனும் £பிப் பலாதமுனியைத் தந்தனரால் (ருக)

£ பிப்பலாதமுனிவர் = பைப்பலாதமுனிவரெனவும்படுவர். இவர் வேதங்களிலே பிரதிபாதிக்கப்பட்டவொருமாதவரென்பதுலகப் பிரசித்தமேயாம். அதர்வணவேதங் கண்டுபிடித்த அதர்வணவிருடியின் (ததீசிமுனிவரின்) குமாரராதலின் இவருக்கு வேதசிசுவென்று மற்றொரு நாமமுமுண்டென்பதை 19வதுகவியின் கீழ்க்குறிப்பிலுஞ் சூசிப்பித்தாம். அத்தகைய இவர்பேரால் இவர்காலத்தினின்றுஞ் சற்றேறக்குறைய 3000-வருடங்களுக்குமிப்பால் மகாபாரதீயகாலத்தையடுத்து மற்றொருவருமிருந்திருக்கிறாரென்று தெரியவருகிறது. அந்த வுண்மையை, விஷ்ணுபுராணத்திலே வேதசாகாபேதங்களை விவரிக்குமிடத்திலே, சாமவேதாத்தியயன பரம்பரைக்கு மூலபுருஷரான சைமினி (வியாசமுனிவரது மூன்றாவது மாணாக்கர்)க்கு சுமந்து வென்றொரு புதல்வருளாரென்றும், அவருக்குத்தந்தையால் சாமவேத முபதேசிக்கப்பட்டதோடுகூட வியாசாசிரியராலேயே அதர்வணவேதமு முபதேசிக்கப்பட்டதென்றும், அந்த சுமந்துஎன்பவருக்குச் சிஷியர் கபந்து. அக்கபந்த முனிக்

எல்லாம் வல்ல விறையருளே யினிய துணையாப்பெறுமுனி வோர், வல்லார்பரவப் பன்னெடுநாள் வாழ்ந்தார் தேவகிரியிலக் காற், செல்லாங்கரிமீ னாமைநர சிங்கம்பன்றி குறள்பரசோன், a பொல்லா வனந்தன் கண்ணனெனப் பூத்து விளையாடுதல்கண் டார் (௫௨)

எட்டாம்பிறப்பின் b மகதமன்னா லினைந்தோட்டெடுத்து மேல்கடற்பால், ஒட்டாருடைக்கொணாத்துவரை யூர்செய்துறு மாணாளிலிங்கே, பெட்டாசிரியர் முனிவரெனப் பெயர்கொடுவந் தார் கலியுளவோர்; சிட்டாச்சார ரெனவவரைச் சேர்த்தார் நம் பித்திறல்வேந்தர் (௫௩)

அறிவார்துரோணர் கிருபரெனுமாத்த ரிடங்கௌரவசுதர் கள்; செறிபா வித்தியார்த்திகளாத் திகழ்ந்தாரவர்க c ளிருதரத் தோர், கிறியாவுளரா லவர்பிரிவான் d கிறியர்குழாத்தாரியர்சார்ங்

குத் தேவசரிசர், பத்தியர், என்னுமிருவருஞ் சிஷியராயினர்கள் அவ்விரு வருள் தேவசரிசருக்கு மேதன், பிரமபலி, சவுல்க்காயனி, பிப்பலாதன், என்னும் நான்குமாணாக்கருண்டாயிருந்தார்கள். என்றுங்கேட்கப்படு கிற வேதசிஷியப்பரசிஷியப் பரம்பரைகளிலேயுமொரு பிப்பலாதமுனி வருண்மை கொண்டுணர்க. இவ்வளவில் பூர்வீகபிப்பலாதமுனிவர் அதர் வணவேதங்கண்ட ததீசிமுனிவரின்புத்திரராவாரெனவும், தேவசரிசர்மா ணாக்கராய பிப்பலாதமுனிவர் கலியுகாரம்பத்தை யடுத்துள்ள க்ஷாமகண் டாரியரைச்சார்ந்த வேறொருவராவாரெனவும் இங்கே சூசிப்பிக்கப்பட் டதுணர்க.

a பொல்லாவனந்தன் = கெடாதபலபத்திரன் (பலராமர்)

b மகதமன் = சராசந்தன், இவன்காலத்தில் மகதராஜ்யமானது வடக்கே யிமாசலமும், கிழக்கே வங்கதேசமும், தெற்கே தெலிங்கமும், மேற்கே மாளவமும்; எல்லைகளாகக்கொண்டு விரிந்துகிடந்ததென்று கேட்கப்படுகிறது. இதிலுள்ளபிரதானமானநதி நருமதையேயாம்.

c இருதரத்தோர் கிறியாவுளரால் = இரண்டுகூட்டத்து ஒருவழி யாகவுள்ளவர். ஆல் = அசை

d கிறியர்குழாத்து = பொய்யர்கூட்டத்து. (திரியோதனாதியோர் திரளில்)

துங், குறியாலளிதன் மருக்குளதாக் கூடத்துணர்த்தும் பகை விளைத்தார் (௫௫)

இளமைப் பதத்தி லிவர்க்குளிக லெழாமலிணக்க முயலா தே,பிளவுபடுத்eதந் தகன்சுதரும்,பிறங்f கந்தகன்சேய்ச்சார்ந்தவரும், அளவளாவா தங்நியர்போ லாகித்தெவ்வுமாகியனர், கொள மெய்விரதன் கைக்கரவக் கொடியோன் செயலே காண்பாரால் ()

சூர்ந்தார் பானின்றவர்பூரிவைச் சரிதப்பெனச்சொல்லாரி கலே, நேர்ந்தாடுதற்கா முத்திவித்தை நிறைய வவர்க்கோதினர் பிறர்பால், gஊர்ந்தாலவாக்காட் டியுமறைவா வொலாரையுடைக்க வழிதெரித்தார், தீர்ந்தார் குருநாட் டவரெனப்போர் செய் வித் தொழிந்தார் சிலர்மாதோ (௫௬)

அப்பாரதீயகாலமடுத் தலைகைமுலையுண் டவன்பதினெண், hஒப்பார் கூட்டக் காரரைத்தற் குற்றதுணையாக் கொண்டிருந் தாண், துப்பா ரியர்கோ ளால்வரைத் துவரை விடுத்தோட் டிட வெணுங்கால், இப்பார் போராற் குழப்பு iமிங்கே யிராதே குமின்றெற் கென்றனனால் (௫௭)

---

e அந்தகன்சுதர்=திருதராஷ்டிரன்புத்திரர் (திரியோதனாதியோர்)

f அந்தகன்சேய்ச்சார்ந்தவர்=தருமபுத்திரருமவருக்கிளைஞரும். (பாண்டுமக்களாகிய ஐவர்)

g ஊர்ந்தாலவாக்காட்டியும்=ஊர்ந்துசெல்லுகிறஆசையைக்காண்பித்தும்,

h ஒப்பார்கூட்டக்காரர்=அழகுபொருந்திய குழாத்தினர். அல்லது ஒற்றுமையுள்ள குழாத்தினர்.

i இங்கே யிராதேகுமின்றெற்கென்றனன்=என்றது கண்ணபிரான்கூற்றும். கண்ணபிரானுக்கு 18-கூட்டக்காரர் துணையாயிருந்தவுண்மையை, பாரதம் சபாபர்வம் 14-ம் அத்தியாயத்தில் கண்ணபிரான் உதிட்டிரரைநோக்கி "ராஜாவே! ஜராசந்தன் எதிர்த்தலால் கரைகடந்த பயம் எங்கட்கு நேர்ந்தபோது நாங்கள் பதினெண்குலத்தோர்கள் கூடி இவ்வாலோசனை செய்தோம்." என்றதனாலுணர்க,

அதுகொண்டுடனே புறம்போதற்கவாவிப் பகையா மிராவணன்கீழ்க், கதுவுங்குடியா யிடரானுங் கருத்தராயுட் கவலுமவர், முதுமைக் கும்ப சனைக்கண்டார் முளரிப் பதந்தாழ்ந்தனர் தமக்குப், புதுமை யாரோர்ந் ததைத்தெரித்தார் புகிதனஞ்சன்மீ ரென்றான் (௫௮)

பன்னெண் கூட்டத்தகவீர்! நப்பரமன்றொண்ட ருமைதென் பார்; நன்ன ருமைக்கொண்டேகுன ஞானவருதி ரேலிலங்கை, மன்னற்குமைக்கீழ்ப் படுத்தாதே வாழ்விக்குநனென் றருளியன்றைக், கொன்னங்கிருந்து கண்ணனின்பங் கொளக்கண் டளவளாய்க் களித்தான் (௫௯)

மறுநாளருள்கூர் ‡தமிழ் முனிவன் மற்றப் பதினெண்குழுக்களையும், உறுநா யகரோ டழைத்திவர்கா ளுடனுமருவாளரையு மின்பம், பெறுவான் கூடக்கொடுபோந்து பெருங்கான்கெடுத்து நாடாக்கிக், குறுகா திலங்கே சனைவிலக்கிக் குடிவைத்துவப்பித் தேகினனால் (௬௰)

---

‡ தமிழ்முனிவன் = அகத்தியர். இவர் துவாரகைசென்றஒருகாலத்திலே, ஆரியர் துணையைப் பற்றிக்கொள்ளவேண்டிய கண்ணபிரான் அவ்வாரியரேவலினாலே பண்டைத்துணையாகநின்றுழைத்த பதினெண்கூட்டத்தாரையுந் தெற்கேபோகும்படி ஆணைவிதிக்கவும், அவரிலங்கேசனுக்கஞ்சித் தெற்கேவரமுடியாதவராகக் கலங்குறுகையி லங்கேவந்த அகத்தியனாரைக்கண்டு சரணடைந்தனர். அவர்தேற்றி,

“தேவரெல்லாங்கூடியாஞ் சேரவிருத்தலின் மேருத்தாழ்ந்து தென்றிசையுயர்ந்தது; இதற்கு அகத்தியனாரேயாண்டிருத்தற்குரியர்; என்று அவரை வேண்டிக்கொள்ள, அவருந்தென்றிசைக்கட் போதுகின்றவர்... ....துவாராபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல்வழிக்கண் அரசர்பதினெண்மரையும் பதினெண்குடிவேளிர் உள்ளிட்டாரையும் அருவாளரையுங் கொண்டுபோந்து காடுகெடுத்து நாடாக்கி, இராவணனைக்கந்தருவத்தாற் பிணித்து அவனையாண்டு வாராமைவிலக்கி பொதியிலின்கணிருந்தனர்” என்று தொல்காப்பியப்பாயிரவுரையிலே ஆசிரியர் நச்சினியார்க்கினியர் கூறுதல்கொண்டும்,—

‘வேந்துவினையியற்கை’’ என்ற [தொல்—பொருள்—32] சூத்திரத்தி

மேலாரியரொ டளாய்க்கண்ணன் விறற்பாண்டவரிற்குழீஇ
வாழ்ந்தான், காலாந்தகவாசிரியருளங் களித்தாங்குயுத்தமிசைந்
தினத்துட், கோலாகலமாச் §சுயோதனனைக் கொலப்பன்னெட்
டக் குரோணிபடைக், கேலாராக்கி யழித்தைவரை யிருப்பிந்
திருந்தார் கலிவந்தான் (௬௧)

னவதாரிகையில் "இது, மலயமாதவன் நிலங்கடந்தநெடுமுடியண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதினெண்வகைக்குடிப்பிறந்த வேளிர்க்கும் வேந்தன் றொழிலுரித்து" என்றறிவுறுத்துதல் கொண்டும், நமக்குவெளியாகிறபடி தலைவருடன் பதினெண்கூட்டத்தாரையும்முன்பு தெற்கேயிருந்துபோயிருந்த அருவாளரை (அருவாநாட்டுத்தலைவரை) யுமழைத்துக்கொண்டுவந்து காடுகெடுத்து நாடாக்கி இராவணனாலுண்டாம் பயத்தையுமொழித்துக் குடியிருத்திவைத்தாரென்று கேட்கப்படுமொருகதைகொண்டிக்கதையினுண்மையையுணர்க. இக்கதையிலே.கண்ணபிரான்காலத்தில்இராவணனுண்மையையும்நன்குணர்ந்துகொள்க.இதனாலும் பாரதவுயுத்தத்திற்குச் சின்னாட்களுக்குப் பின்னர்த்தா னிராமாயண வுயுத்தகாலமென்பது அறிஞருக்கெல்லாமினிது விளங்குதல்திண்ணம்.

இங்கேயும் மேருத்தாழ்ந்து தென்றிசை யுயர்ந்ததற்காகப் பூமியைச் சமப்படுத்துவான்போதுகின்றவரென்னுங்குறிப்புண்மையால், பார்ப்பதியம்மையார்திருமணங் கண்ணபிரான்காலத்திற்றான் நடந்ததோ வென்னுமோரையமுண்டாகலாம். ஆனால், அந்நாளில் அகத்தியனா ராச்சிரமத்திற்குப் பட்டத்திற்குவரு மொவ்வோரகத்தியனாரையும் ஆதியகத்தியனார் விஜயமாயதேபோலக் காசியினின்றும் அபிஷேகித்து ஒவ்வோரைதிகங்களோடும், பிரசித்த புருஷரையெல்லாம் பார்த்துக்கொண்டே வருமாடம்பரங்களோடுந் தெற்கே விஷயமாக்குகிற வழக்கில் வருங்காலத்து நடபடிக்கையாதலின் ஆசிரியர்நச்சினார்க்கினிய ராண்டுக்கூறினரெனக் காண்பாருக்கு அவ்வையமுண்டாவதில்லை யென்றுணர்க.

§ சுயோதனனைக் கொலப்பன் னெட்டக்குரோணிபடைக்கு எலாராக்கி யென்றது = துரியோதனனொருவனைக் கொல்லுதற்காகப் பதினெட்டக்குரோணி படைக்கும்பகைவராக்கி என்ற பொருடரல்காண்க. இங்கே அக்குரோணி ஒன்றக்கு தேர் 20870, களிறு 2087 , குதிரை 65610, காலாள் 109350, ஆக 16700 இருநூற்றுப்பதினாறாயிரத் தெழுநூறென்று கணக்காகிறது. இவ்வாறே 18 அக்குரோணி உயிர்த்தொகைகள்பாரதவுயுத்தத்திற் றொலைந்தனவென்றுணர்க. இதில் எலார் = பகைவர்.

வடமனுளவராவனும்பும் வல்லா ரெமால்வல் லைரயெவா, மடறமினத்துட் காட்டுவித்திங் கழித்தேமெமிற்சில் லோரழிந் தார், உடன்பட்டினியிற் நாட்டி னுர னுளாரேயிலரா னமகொக்கத், திடனுற்றீண்டு வருதியெனத் தெரித்து வரித்து வருங்கலிபன் ( )

வருதல் வினைய்க்கண் ணனையிழந்து வருத்தங்கொண்டாங் கிளைத்திருக்குங், தருமன்முதலோர்கிரிக்குநடந்தனரேற் றடுப்பா ரிவணுளரோ? பொருநர்க்காஞன் றன்னரசே புரிந்தாரியரை வரித்துவரித், தொருவில் குடியாளவைத்தவரை யுயர்த்தான் *மு னோரை யொறுத்தனனுல் (௩௩)

மாண்டானவன்பின்னாரியர்வாழ்வானோர்தலைவர்த் தமிலாய்ந் தார், §கோண்டார் பரசிராமனையக் கோமான் றமராதரித்துள வாந், தீண்டாவழக்கை மனுநூலாத் திரித்தாண்டவற்றை நிறு த்திடுவான், ஆண்டான் மன்னர் பெரியோர்க்க தருளி யடக்கத் துணிந்தனனுல் (௩௪)

எவருமீந்தப் *புதுமனுநூலியலிற் படர்தற்கிணங்குகிலர்; அவனதுணர்ந்தான் ளுயையுமோ ரீரடன்மன்னனையுங் கொன்ற திறற், பவநெஞ்சமழன்று கண்சிவந்து பாரிற் போர்க்கோலங் கொடலைங், துவருற்றிடச்சிற் றரசுகளை யொழிந்தான் சிலர்த் தன்றுறைப்படுத்தான் (௩௫)

---

*முனோரையொறுத்தனன் =(பிராசீனஆரியரும், பழந்தமிழ்க் குடி களுமாகிய விருதாரத்துப்) பூர்வீகரை அடக்கினன். (கீழ்ப்படுத்தினன்)

§ கோண்டார் =கொண்டார். இது நீட்டல்விகாரவழிக் கோண் டாரென நின்றது- பரசிராமனை ஆரியருக்கோர் தலைவனுகக்கொண்ட வுண்மை, "பரசுராமன் தாயைப்படுகொலைசெய்தவன்; க்ஷத்திரிய வமிசத் தைக்கருவறுக்கப் பன்முறை படையெடுத்தவன்; அத்தகைய செயல்க ளால் அவன் பலவானென மதிக்கப்படுதலின், ஆரியர்கள் அவனை மகுட வர்த்தனனுகக் கொண்டார்கள். என்பொருகேள்வியாலும், அவ்வுண் மையை மலையாள பாஷாக்கிரந்த சரித்திரம் சூசிப்பித்தலினுலும் நன்கு போதரலுணர்க.

* புதுமனுநூல் =(க்ஷாமதண்டாரியாலே)புதுப்பிக்கப்பட்டமனுஸ்மிருதி.

இங்கேபதனை புதுமனுநூலென்றதனால்பழயமனுஸ்மிருதிவேறாகவுண்மை ஸ்பஷ்டமாகிறது. ஆகவே ஆராய்ச்சிவல்லுநர்: பிரமபுத்திரராகிய மநுவானவராலே நாரதருக்குப்போதிக்கப்பட்ட ஆதிமநுஸ்மிருதி (100000) இலக்ஷம் சுலோகங்களையுடையதாயும், (1000)ஆயிரம் அத்தியாயங்களையுடையதாயும்,(24)இருபத்துநாலுவிஷயங்களைப் பிரதிபாதிப்பதாயுமிருந்ததென்றும், அப்பால் அதைப்(12000) பன்னிராயிரம்பாடல்களாகச் சங்கிரகமாக்கிப்பிருகுமகாரிஷியின்சந்ததியாகிய்சுமதியென்பவருக்குப்போதித்ததாகவும், பின்னால் அதைச்சுருக்கி (4000) நாலாயிரங் கவிகளாகச் செய்யப்பட்டுளதென்றுங்கூறுவர். இவ்விவரம் நாரத ஸம்ஹிதையின் முதற்பாகத்தில் நன்கு விளக்கப்பட்டிருப்பதாகவும் கேட்கப்படுகிறது. அங்ஙனமிருக்கவும், (12) அத்தியாயங்களுக்கு(2684)சுலோகங்களையுடைய ஒருநூலைமனுஸ்மிருதியென்றால்அதனைபுதுநூலென்பதிற்றடையென்னை? யோசிக்குமிடத்து ஆதிமனுஸ்மிருதியும்,அதன் சங்கிரகமாகிவந்தஅவாந்தரமனுஸ்மிருதியும், அதன்சங்கிரகமாகவந்தகடைசிமனுஸ்மிருதியும்,வேறுபாடில்லாத ஒருமையுடையனவாக. இருக்குமாகலின் அம்மூன்றனையுமில்லாமலாக்கி க்ஷாமகண்டார்பாசாரகங்களை இங்கேபிரதிபாதகமாகப்புதுப்பித்த இப்புதுமனுநூல்அறிஞருக்கு அனங்கீகாரமேயாதல் திண்ணமென்றறிக.

£ அடல்மன்னன் = கார்த்தவீரியார்ச்சுனன். இவன் ஹைஹயவமிசத்துக்கிருத வீரியனுக்குப் புத்திரனாவான். இவனுக்குத் திரிஷிதமுனிவர் வரத்தால் அக்கினிபகவானே அஸ்திரமாயிருந்தனர். ஆதலின் ருஷியாச்சிரமங்களையெல்லாங் கொளுத்திக்கொண்டு வருகையில் ஆபஸ்தம்பமுனிவர் பரசிராமனாலுன்சிரமொழிகவென்றிவனைச்சபித்தனர். அந்தசாபஹேதுவால் ஒருகாலத்தில் கார்த்தவீரியார்ச்சுனன் சமதக்கினியாச்சிரமத்தையடைந்து காமதேனுவைவேண்டினான். அவர் கொடுத்தற்கிசைந்திலர். அவருடன் போர்தொடங்கினன். அதுகண்ட பரசிராமனெதிர்த்துக் கார்த்தவீரியார்ச்சுனனைக் கொன்றான். அஃதுணர்ந்த கார்த்தவீரியார்ச்சுனனுடைய மக்கள் பரசிராமனில்லாத நேரத்திலே வந்து பழிக்குப்பழிவாங்குங்கருத்தினராகிச் சமதக்கினி முனிவரைக் கொன்றுபோட்டார்கள். அதுதெரிந்த பரசிராமர் க்ஷத்திரியகுலத்தை நிருமூலமாக்குவதாகச் சபதஞ்செய்து, போர்க்கோலங்கொண்டு (21) முறை படையெடுத்து க்ஷத்திரியர்களைச் சங்காரஞ்செய்துபறிக்கப்பட்ட பூமிகளைப் பிராமணருக்குத்தானஞ்செய்துவந்தானென்பதொருகதை. இஃதொருபாலாகவும், புதுமனுநூலையநுட்டிப்பிக்க முயன்றவனாகிப் பலவரசரிடத்துஞ் சென்

அந்நாட்டயரதனையுமெதிர்த்தடுபோர்வேண்டவவனுய்ந்
தே, சின்னாட்கழிப்பானும்மணஞ்செய்திறன்றேற்றினன்போய்
வருகவென்றான், பின்னும் மழுவாயுதன்றெய்வப் பிறங்கற்கிவர்
தல் குறித்தனனால், முன்னாலஃதோர் சாலியமாமுனிவர் குழுமி
யிதுசெய்தார் (௬௬)

இனியீண்டுறையினிழிநெறிப்பட்டியலவேண்டு மிணங்கில
மே, லனியாயத்திற் கஞ்சானலனர்த்தம் விளையுமாதலினாற்,
றனிதீர்தரநா மவாசிபுக்குச் சுகவாழ்வுறுவோமெனத்துணிந்
தார், பனிமார்மக்கள் பொருள்களுடன் படர்ந்தார் வந்தீண்
டடைந்தாரால் ௬௭

நடக்கமுடியாதுளகிழவர் நலியும் பிணியுற்றவர்மனத்தை
யடக்க முடியாதுலாவாக்கூத்தாட்ட மவாய்ச்செலிளைஞர்சிலர்,
கிடக்கவவர்க்குளிரங்கியெம்மான் கிருபைதுணையென்றொப்பு
வித்தே, திடுக்கத் தெழுந்தீண்டடைந்துவகைசிறந்தார் குடியா
விருந்தனரால் (௬௮)

அவர்வாழிடமே சாலியமங்கலமா மறவோர்குடியிருப்பாற்,
சிவமாங்கராய்ச் சிறந்தவதிற் றிகழ்மான் சாலிகோத்திரர்தாம்,
பவமாற்றிடமாநிசிநோன்புபற்றி யுயர்ந்தாரிக்கதைதான், $இவ
ராதரமெய் நிறுவுசங்க விராமாயணத்திலிலங்குமென்றார் (௬௯)

றிருக்கிறானென்றொரு கேள்வியுமுண்டு. ஆதலின் அவன் 73-முறை படையெடுத்ததாக மேல் 77-வது கவியிலறிவுறுக்கப்பட்டது மிங்கே கவனிக்கத்தக்கதாம்.

$ இவராதரமெய்நிறுவுசங்கவிராமாயணம் = அன்புமேலிடு முண்மையை காட்டவல்லசங்கராமாயணம். இஃது உண்மையைநாட்டவல்லதென்றதனாலேயே தற்காலத்தாராய்ச்சிக்கு வந்துள்ள தசவித இராமாயணங்களின் மகிமையும் நன்குவிளக்கும். அவ்வாரிய இராமாயணங்களெல்லாமொன்றுசொன்னபடியொன்று சொல்லுவதில்லை. ஆதலின் அவையனைத்தும் மாராய்ந்து உலகமங்கீகரிக்கத்தக்க உண்மைகளைமாத்திரந் திரட்டியாக்கப்பட்டுள்ளது சங்கவிராமாயணமென்றொரு கேள்வியுண்டு. அஃதாரியர்கட்டுக்கு மாறுபட்டுமின்றுண்மைபோதித்தலால் அவர்கள்

உவந்தார்முனிவர் வருமுனர்க்காத் தோங்குமதிச்சாலியப் பெரியோர், தவந்தான் சிறந்ததெனக்கொடுவின் சண்டைக் கொதிக்கித் தென்பார்க்கேய்ச், சிவந்தான்கதியாக் கொடுவாழ்நர் *தெய்வக் கிரிநின்றவரொடந்த, நவந்தான் ‡ தரணிகேள்வனெதிர்நவின்மே? யாங்கெனடந்ததென்றார் (௭௧)

ஆதரத்துவஞ்சோறுமன்பார் துறவீர்! கேண்மினென்று கண்ணீர், போதலொடுகூறுநராங்கிப் புநிதர்தீர்ந்தபின்னருள்ளார், ஏதம் வருமென் றுணர்ந்துமஞ்சா திருந்தார் • மழுவாயுதனும்வந்தான தீதிலவரும்போய்க்கண்டார் திருவன்கேட்பச் சுபஞ்சொன்னார்.

ஓ சாலியர்காள்! நீவிருடையுலகுக் காக்கியருடிறனல், மாசாதரியராயினுமிம் மனுநூலுணர்ந்து வழிப்படிற்றான், தேசார் தருவீரெனவதையாக் தெரிந்தோதுஈமென்றனர்துகேட்; டாசசர்சூழ் புவியிலெங்நேராஞ்சாநிவாறு டிலரெவரும் (௭௨)

அவ்வாறறியாமைவினீவிரறைந்திரதற்கு மகிழ்கின்றோம், எவ்வாறேனுமுணர்கின்றேயியப்புமுமதுட்கிடையையென்று, செவ்வாய்மலர்ந்து நால்கொடுத்தான் செங்கையேற்றுத் தோர்ந் தடனே, ஒவ்வாக் கொலைவேள்வியும்பிறவு முறுமீதெமக்காகா தென்றார்

(௭௩)

ஆகா! நன்றாயிருக்குதும்மை யடிமையாக்கிக் கொடுபோவோம், நோகாதேகைக் கொண்மினென்றான் றணியோய்! ஒருவர்க்கச்சமுற்றோ, வாகார் சிநேகம் வேண்டுமென்றோ, வருவாய் குறித்தோ, பிசிபகரோம், சாகாவுடம்பை யிடர்படுத்தத்தக்காரிலரென் றுணர்வமென்றார்

[௭௪]

லொழிக்கப்பட்டோ அல்லது வேறெப்படியோ இப்போதுகிடைக்கமாட்டுதில்லை.

* தெய்வக்கிரி நின்றவரோடந்த நவந்தான் = தேவகிரிப்பட்டினத்திலிருந்தவரோடந்தப் பூமியும்,

‡ தரணிகேள்வன் = பரசிராமன்.

கண்ணிற்பொறிகள் பறக்கவுள்ளங் காய்ந்தேகடிந்து சூழ் நின்ற, எண்ணில் கொலைவீரரைநோக்கி யிவரைப்பிடித்தா ளாக்குமென, மண்ணீற்கண்டோ ரஞ்சவந்தோ! வளைந்தார்பற்றிச் சிறைசெய்தார், உண்ணின்றிருளி தடுப்பவிடருறுத்தா தழைத்துக்கொடுபோனுர் (எரு)

வெறுங்கையினரை யெதிர்க்காத விருத்தர் தருமநீதியை மறந்து, குறுங்கைவாளர் சிறையாக்கிக் கொடுபோ கினர்பின் பச்சுறுத்திப், பெறுங்கைவருக்கந் நூல்கொடுத்தான் புறஞ்சாற்படுத்தி மகிழ்கூர்ந்தான், தெறுங்கைமழுவேந் தியமறையோன் சென்றுனெதிர்த்தாக்கொன்றுனே (எசு)

தாமேவாழ்ப் பார்ப்பார்க்காத்தலைமை வகித்தமழுக்கரத்தோன், பூமே *லெழுபான் மூன்றுமுறை பூபாலரைக்கொல் படையெடுத்தான், ஆமேலிரகு ராமன்வந்தா னவன்பாலெதிர்த் தானடலிழந்தான், மாமேலாழிக்கரைச்சார்பில் வாழுந்தவ்நோற்பது குறித்தான் (எஎ)

அன்னுளவனுற் பிடித்தடிமை யாக்கி யிடர்ப்பட்டோரெல்லாம், முன்னுவந்தோவைய! வெமை முதுபேற் றினுக்காளாக்காதே, யின்னுள்வரைக்கு மென்னகண்டீர்? இதன்வே றுவெத்தவங்குறித்தீர், பின்னுந்தவமுன் விடுதியியாம்பெறுங்காலுளதே லருண்மென்றுர் (எஅ)

கேட்டின் பிவரார் தரிற்றவமுங் கிளருமெனவுட் கொண்டு ᵠமலங், காட்டிற்குடன்கொண்டேகியங்கே கடும்போர் புரிநா கரைவிலக்கி, நாட்டிற்கியைபா கெடிருத்திநகரிபுதுக்கிக் குடியேற்றிச், கூட்டிற் பிரித்தவ்வவர்மரபு குழீஇவாழ் தரவைத்துயர்த்தனுல் (எசு)

---

* எழுபான்மூன்றுமுறை படையெடுத்த வுண்மையை, விஷ்ணு புராணங்கூறுதலாலுணர்க.

ᵠ மலங்காடு=மலைவனம். இஃது பனை+காய்; பனங்காயென் ருயதுபோல மலை+காடு மலங்காடென ஆயதாம்.

பிறகாரியரைக் கொணர்ந் $தவர்க்குப் பிறந்தவளர் சூத்திரரோடும், மற்றோரவரை மேலாக்கி வைத்தானுண்டிச் சாலியர்பால், அறனூர்தருவான் கொடிப்பட்ட மார்க்குங்கபிறு பரிவட்டம், நிறனூர்பூணூன் முதற்பெருஞ்சீர் நிறீஇக் கோயிலையையரையுயர்த்தான் (அ௰)

அன்றுமுதலாரியருநயனுற்றவவர்மாணக்காப்பான், இன்று மலையாளஞ் சாலியரென்றிருக்கின்றோர் தூசாக்கிநல்கி, மன்றுபுகழ் மாசைவருமிம் மலைநாட்டவருமோரினமாப், நின்றுமின்றாயகுத்தியன்காணிகர்த்துட்சார்புற்றனரென்றோர் (அக)

27-வது சாலியவந்தணரவாசியிற் குடியேறிய படலமுற்றிற்று.

$ அவர்க்குப்பிறந்து வளர் சூத்திரரெனறது:—

"த்வஜாஹ்ருதோ பக்ததாஸோ க்ருஹஜ: க்ரீததத்திமௌ||
பைத்ரிகோதண்டதாஸச்சப்தைதே தாசயோநய:|| அதாவது, உயுத்தத்திற் செயிக்கப்பட்டவன், தரித்திரத்தினாலே வந்தடைந்தவன் தாஸீபுத்திரன், கிரயத்திற்கு வாங்கப்பட்டவன், ஒருவனாற் கொடுக்கப்பட்டவன், வழிவழியடியான், குற்றத்திற்காகவேலைசெய்பவன், ஆகஏழுவரும் சூத்திரப்பிறப்புடையவர்கள். (மனு8—415) என்றும், அடுத்த சுலோகத்தில், மனைவி, புத்திரர், தாசர், மூவருக்கும் தனமேகிடையாது (அவர்கள் வைத்திருப்பவை எஜமானனுடையவைகளே) என்றும்,
'விஸ்ரப்தம் ப்ராஹ்மணச் சூத்ராத்ரவ்யோ பாதாநமாசரேத்||
நஹிதஸ்யாஸ்தி கிஞ்சித்ஸ்வம் பர்த்ருபார்யதநோஹிஸ:|| அதாவது, பிராமணன் சூத்திரத்தினிடத்திலிருந்து திரவியத்தைவாங்குகிறானென்பது அசம்பவம். (அந்தவார்த்தையில்லை. ஏனென்றால்) அவனுக்குயாதொரு சொத்துமே கிடையாது. அவன் தனமில்லாதவன் (பிராமணதிரவியங்களை அவன்) வகித்துக்கொண்டிருக்கிறவனே. (மனு8—417) என்றும்,

ஏழுந்த ஸ்மிருதிபோதங்களிற்கேட்கப்படுகிறபடி உயுத்தத்திற்செயித்துக்கொண்டுவரப்பட்டவர், தரித்திரத்தினால் வந்தடைந்தவர், (என்பது குல்லூகபட்டர்................வைத்தியநாததத்தசாஸ்திரியாருரை) வேலைக்காரியக்கள், விலைக்குவாங்கப்பட்டவர், ஒருவனாற் கொடுக்கப்பட்டவர், குலவழியாகத்தொன்றுதொட்டுள்ள அடிமைகள், குற்றத்திற்காகவேலை செய்பவர், இவ்வேழு அடிமைகளுஞ் சூத்திரரென்று ஆரியராற் கொண்டாடப்பட்டிருந்தனராதலின், அந்த அடியாருடைய பெண்களை, எஜமானர்கள் புணர்வதுமாரியருக்குள்ள வழக்கமேயாதலின், அங்ஙனம் புணர்வதாற் பிறந்த ஆரியவித்துக்களை ஏனோ ஆரியரென்னாமல் சூத்திர

ரென்றாராதலின், அவரைப் பாதந்திரரென்றாராதலின், அவ்வாரியக்கூற்றிற்கிணங்கியிருக்கு மந்த மரபினரையே யாமென்றறிக. பக்ததாஸோ=தரித்திரத்தினுலடைந்தவன் இஃதிக்ஷாமகண்டத்துஆரியாநுஷ்டானத்திலுள்ளதாக்காண்க அந்தவுண்மை,

I உயுத்தத்திற் செயித்துக்கொண்டுவரப்பட்டவர்கள், 1 மோசே 14-14, 5 மோசே 20—14, 21—10, 11.

II தரித்திரமுதலிய காரணங்களாலடிமைப்படுபவர்கள், 3 மோசே 25—39

III விலைக்குவாங்கப்பட்டவர்கள், 1 மோசே 17—12, 23. ஷை 37—28, 2 மோசே 21—7.

IV பலாத்காரமாய்ப்பிடித்துத்திருட்டளவாகக்கொடுக்கப்பட்டவர்கள் 2 மோசே 21—16, 5 மோசே 24—7.

V குலவழியாகத் தொன்றுதொட்டுள்ள அடிமைகள் 1 மோசே 14—14, 15—3, 17—23, 21—10

VI குற்றத்திற்காக வேலைசெய்பவர்கள், 2 மோசே 22—3, நெகெ 5—4,5.

VII வாங்கினகடனைக் கொடுக்கத்திராணியற்றடைந்தவர்கள், 2 இராஜா 4—1, மத்தேயு 18—25. என்னும், விவிலியநூற்பாதங்களானன்குபுலப்படும். இங்கே, விதேசாசாரத்தினின்றும் ஓரோரு வகுப்பைமட்டுந் திரித்தேற்படுத்தியிருக்கிறார்கள். அதுகொண்டு இந்நூலை (மனுஸ்மிருதியை)யாக்கியோர் க்ஷாமகண்டாரியரென்பதை மறுக்கலாகாது. மேலும், ஆராயப்புக்குழி ஈண்டெடுத்துக்காட்டியுள்ள வாக்கியங்களையும், சங். 86—16, 116—16, 2 மோசே 1—14, 16 ஷை 2—23, ஷை 21 2, 4, 20, 21, ஷை 5-ல் 23—15, 16, ஷை 15—13, 2-சாமுவேல் 21—9, 1 கொரிந்தியர் 7—21 முதலிய வாக்கியங்களையும் தனித்தனிஎடுத்துவிவரித்து மனுஸ்மிருதியோடு ஒத்துநோக்குந்தோறும் நோக்குந்தொறும் இச்சூத்திரதருமவிதிகள் பெரும்பாலும் ஒருமையுடையனவேயாக்காணப்படுகின்றன. அல்லாமல் பிறவும்வேற்றுமையுள்ளன காணுதல் மிகப் பிரயாசையேயாம். ஆகவே, மனுஸ்மிருதிகூறுமாசாரங்கள் க்ஷாமகண்டாரியருக்குகந்தனவாமேயன்றி இந்நாட்டவராய பழந்தமிழ்க்குடிகளுக்கோ, பிராசீனஆரியருக்கோ உரியனவர்கா. அந்தவுண்மைக்கு அன்னார்விரும்பாத சூத்திரஜாதிப்பெண்களைப் பிராமணர் கூடுதலால் தோஷமில்லையென்னுள்ளதோர் மலைநாட்டுவழக்கும், நித்தியமாகவில்லாமல் விசேஷமாகப் பலகிராமங்களிலும் இடைஇடையே அவர்களால் நடத்தப்படும் அஜமேதமுதலிய யாகமகோற்சவங்களுமே சான்றெனவறிக.